22

உ

தசகாரியம்.

திருவாரூர்

இலக்கண விளக்க பரம்பரை.

சிதம்பரநாத தேசிகர்

இயற்றியது.

சென்னை

[illegible]த்திரன் பவர் பிரஸில் அச்சிடப்பட்டது.

1914.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்

சிதம்பரநாத தேசிகரியற்றிய

தசகாரியம்.

மதுரைச்சங்க வித்வான்

ஸ்ரீமத் ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை

எழுதிய தமிழ் முகவுரையும், பிரம்ம ஸ்ரீ டாக்டர்

வை. வே. ரமண சாஸ்திரிகள் M. A. Ph. D.

F. Z. S. etc., எழுதிய ஆங்கில முகவுரையும்,

அரும்பதவுரையும் சேர்ந்தது.

சென்னை சுதேசமித்திரன் பவர் பிரஸ்.

1914.

All Rights Reserved

உரிமையுரை.

எனது பெற்றோர்கட்கு,

அடியேனைப் பெற்று வளர்த்து நன்னிலைமைக்குக் கொண்டு வரவேண்டுமென்று முயன்ற விருவர்களில், எனது தந்தை கல்வி பயிற்றப்புகுந்த சின்னாட்களில் இம்மண்ணுலகைத் துறப்பினும், அப்பாரத்தைச் சலியாது வகித்து, கல்வி நலம் முழுமையும் செய்துவைக்க வியலாது விடினும் இந்நிலைமைக்காவது கொணர்ந்த என்றாய்க்கும் இந்நூலை உரிமையாக்க முன் வந்ததைப் பெரியோர்கள் பொறுத்தருள வேண்டும்.

இலக்கண விளக்கப் பரம்பரை;

திருவாரூர்-சோமசுந்தரதேசிகன்.

பரிசோதனா பத்திரம்.

குறிப்பு:—தெரிந்த பிழைகள் காட்டப்படவில்லை.

பக்கம்.	பாட்டெண்.	பிழை.	திருத்தம்.
1	௨	கூராணை	கூரரணை
2	௫	தரிசினிகள்	தரிசனிகள்
3	௮	தறுகுண்மா	தறுகுணமா
5	௯	படலர	படவர
6	௧	நிமலவர்	நிமலவர
8	௩	மேடனை	மேடணை
13	௧	ப்ரசாதம்போல	ப்ரசாதம்போல்
	௨	சூழவா	சூழ்வா
	௯	அன்னுயகன்	அந்நாயகன்
14	௮	னிரைபெற	4வரியிற்சேர்க்க
	௰	வருட்	1வரிஎடுத்துவிட
		தான்	2 ஷெ
	௰௩	நிட்கிரு	நிட்கிரா
15	௰௫	மெஞ்ஞான	மெய்ஞ்ஞான
	௰௭	றிறையுவ	றேயிறைவ
16	௨௧	கனெழி	களெழி
	௨௪	வாக்குகட்கோ	வாக்குக்கட்கோ
24	௪௨	பண்ணமா	பண்ணமர்
		கொள	கொள்
27	௩	சிவப்ப	சிவப்பு
30	௰௭	௰௪	௰௭
30	௨௧	வருண்	வருண
31	௨௪	யாதீ	யாதி
		௨௭	௩௰
34	௪௭	மநுநான்	மறுநான்
39	௰௨	போல்வ	போலவ
41	௭	சாக்கிரந்தோர்	சாக்கிரந்தேர்
,,	௰௧	சிறப்பறு	சிறப்புறு
44	௧	வ்ருவ்	வுருவ:
51	௰	பொருத்து	பொருந்து

உ

சிவமயம்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

கடவுள் வாழ்த்து.

செஞ்சடையன் முக்கட் டிருமுகத்தன் பொற்களத்து
நஞ்சடைய வாங்கு நறும்பதத்தன்—நெஞ்சகத் தடையு
நந்தரத்து மன்றத் தருநடத்த னென்றுரைத்தும்
நந்தரத்து நம்பனையே நாம்.

I. ஆக்கியோன் திறன்.

இத் தசகாரிய நூலாசிரியர் திருவாரூரின்கண் அபிஷேகத்தர் மரபிற் றோன்றிய சிதம்பரநாத தேசிகரென்பார். இவரது தந்தையார் இலக்கணவிளக்கம் வைத்தியநாத தேசிகர். இவர் தம் தந்தையாசிரியர் பக்கல் வடமொழி தென்மொழி இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்று ஆகமமுடிபும் வேதமுடிபும் இற்றெனத் தெளிந்தறிந்தவர். கவிகள் நான்கினும் வல்ல கவிஞர், அரும்பொருளைச் செம்பொருள் நடையாற் காட்டுங்கமகர், எதுவும் மேற்கோளும் நீட்டிப் பிறர் கொள்கை யவிதரத் தமதே நிறுத்திடும் வாதியர், அறமுதல் நான்கும் நன்குணர விரித்துரைக்கும் வாக்கியர், நாவலர் மகனார் நாவலர், தேசிகர் தனயர் தேசிகர், முப்பொருட் பொதுவியல்பு சிறப்பியல்பு தேர்ந்து உருக்காட்சி சுத்தி வாய்ந்து உருவமூன்றும் திகழ்தரப்பெற்று இடையறாது ஆனந்தத் தழுந்திடும் சைவமுனிவர். நல் வேதாந்தத் திறப்பொரு டேர்ந்தவராதலிற் சிவதீக்கை செய்வித்தற் குரியர். இவரது குலத்தின



(சிவஞானதேசிகர் என்கிற
வன்மீகநாததேசிகர் IV)

ரியாவரும் கல்வியிற் பெருமக்களும் பெருமக்களாற் பெரிதும் புகழ்ப்பரிசு பெற்றோருமாவர். இன்னார் மரபட்டவணை—

இவ் வடைவினருள் வைத்தியநாத தேசிகர் I இலக்கண விளக்கம், நல்லூர்ப்புராணம், பிராயச்சித்த சமுச்சயம், திருவாரூர்ப்பன்மணிமாலை, மயிலம் பிள்ளைத்தமிழ், பாசவதைபரணி இன்னோரன்னவற்றையும் தியாகராஜதேசிகர் I பாட்டியல், சிவாகசியம் ஒன்பதாமத்தியாயம் ஆதியவற்றையும், இந்நூலாசிரியர் தாமும் இத்தரசகாரியம், வில்லிவாக்கப் புராணம், பதிபசுபாசப்பனுவலுரை, சிவஞானசித்தியார் பொழிப்புரை முதலியவற்றையும் வடுகநாததேசிகர் திருமுல்லைவாயிற்புராணத்தையும், தியாகராஜ தேசிகர் II தேவையந்தாதி, காழியந்தாதி, கோவை, உலா, திருக்கூட்டசதகம், அன்பர் போற்றிக்கலிவெண்பா, என்றற்றொடக்கத்தனவற்றையும், வைத்தியநாத தேசிகர் II பதிகச்செய்யுளையும், சதாசிவதேசிகர் III திருவாரூர்ப்புராணவசனத்தையும் இயற்றியருளினர்கள். தியாகராஜதேசிகர் II பதிகச் செய்யுளையும் திருமுல்லைவாயிற் புராணத்தையும் வரைந்தனரென்று இலக்கணவிளக்கப் பதிப்புரையில் தாமோதரம் பிள்ளையவர்கள் கூறுவர். வைத்தியநாத தேசிகர் I பொம்மபுர ஆதீனத்து எம் குடிமுதல் சிவஞான பாலையசுவாமிகளாற் பரணிபொருட்டும் பிள்ளைத்தமிழ் பொருட்டும் சூனம்பேட்டை மானியமும், உப்பளமும், மலையாளத்தாசராற் பலகிராமங்களும் சன்மானங்களும், தியாகராஜதேசிகர் II இராமநாதபுரச் சம்ஸ்தான மந்திரி தாமோதரப்பிள்ளையாற் சூரியங்கோட்டைக் கிராமமும் விஜய அருணாசல் வணங்காமுடியாரால் தமதுபேரிற் பாடிய கோவையுலாக்களின் பொருட்டுத் தண்டிகைவரிசையும், மறுவனேந்தல் முதல் மூன்று கிராமமும் பரிசுபெற்று மிகச் சிறப்புற்றிருந்தனர்கள். சூனம்பேட்டை மானியமும் அளமும் மூலபுருடர் வன்மீகநாத தேசிகருக்குக் கிடைத்தனவென்று ஆதாரமின்றியுரைப்பர் தாமோதரம் பிள்ளையவர்கள். இவ்வமிசோற்பவரை அந்தகக்கவி வீரராகவமுதலியார், படிக்காசுப்புலவர்,

இலக்கணம் அம்பலவாணத் தம்பிரானு ருள்ளிட்டார் வியப்புற்று வியந்து கொண்டாடியுளர்.

இந்நூலாசிரியர் தம்மொடு கற்றோர் மேற்குறித்த படிக்காசுப்புலவரும், நடுநாட்டு மாதைத் திருவேங்கடநாதரு மாவர். இவர்காலத்து வசித்தகவிஞர், மேற்கண்ட புலவர் சிகாமணிகளும், அமிர்தகவிராயரும், இராகவானந்த யோகிகளும், எங்குடி முதல்வர்களாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், சிவஞானபாலையர், சாந்தலிங்க சுவாமிகள் ஆவர்.

"இராமநாதபுரத்தில் கி. பி. கசுஅடு-ம் ஆண்டுமுதல் களஉ௩-ம் ஆண்டுவரையும் அரசுபுரிந்த இரகுநாத சேதுபதியின் சமஸ்தான வித்துவானுன படிக்காசுப்புலவர் இந்நூலாசிரியரிடம் (வைத்தியநாத தேசிகர் I. இலக்கணவிளக்கம்) கல்வி கற்றவராதலானுஞ், சற்றேறக்குறைய கஅ௰ வருஷத்தின் முன் நன்னூல் விருத்தியுரை இயற்றிய சங்கர நமச்சிவாயப் புலவரது இயற்றமிழாசிரியராகிய சாமிநாத தேசிகர் இவர் (வைத்) காலத்துச் சிறுவயதினரா யிருந்தமையானும், இவர் (இந்நூலாசிரியர் பிதா) காலம் இற்றைக்கு (விரோதிஞு கி. பி. கஅ அக) உடு௰ வருஷத்தின் முன் னென்பது போதரும்" எனத் தாபித்தனர் தாமோதரம் பிள்ளையவர்கள் (பதிப்புரை-பக், உ) ஆதலின், இற்றைக்குச் சுமார் உ௬டு வருடமாகும். அன்றியும் சிவஞான பாலையர் சிவப்பிரகாச சுவாமிகள் காலத்தவர், இச்சுவாமிகள் எங்குடி முழுதாளும் அல்லமதேவரது சரித்திரத்தை பிரபுலிங்கலீலையென முதனூற்பெயரான் மொழிபெயர்த்த அப்தம் 'பார்கெழு சகாத்த மூவைஞ்ஞூற்றெழுபானுன்காவ தாகிய கரநாமங்கொள் ஆண்டு' (கி. பி. 1652) ஆதலின் இற்றைக்குச் சுமார் 262 வருடமாகும். மேலும் மாதைத் திருவேங்கடநாதர் மதுரையில் ரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கருக்கு மந்திரியாய் கி. பி. 1682-ம்ஞு முதல் திருநெல்வேலியில் இராஜப் பிரதிநிதியாய் மங்கம்மை தம்பேரர் விஜயரங்க சொக்கலிங்க நாயக்கருக்கு அரசியலை ஒப்புவித்த கி. பி. 1705-ம்ஞு வரையும் ஆட்சி புரிந்தனர்.

இவர் மந்திரியாவதற்கு முன் கடந்த பருவம் 30 ஆட்டைய தாகக் கொள்ளின் இற்றைக்குச் சுமார் 262 வருடமாகும். ஆகவே இவரது காலமும் அத்துணைத்தெனத் துணியப்படும்.

2. நூல் திறன்.

இந்நூல் அநாதிமுத்த முதல்வன் அநாதிபெத்த ஆன்மாக்களின்பொருட்டு அநாதியே திருவாய்மலர்ந்தருளிய வேதத்தை மூலமாகக்கொண்ட சிவாகம பூதசார ஞானசாத்திரப் பகுதியாயது. சித்தாந்த ஞானபாதச் சிறப்பதிகாரத்துட் கண்ட சாதனம் பயன் என்பவற்றுக் கூறப்பட்ட பத்தவதாரமும் இத் தசகாரியமாம். ஞான பாதத்திலிதின்ன விடத் தமையுமெனத் திராவிட மாபாடியகாரர் கூறியுளாராண்டுணர்க. திருநெறித் தமிழ்முறை பன்னிரண்டின் கருத்தும் மெய்கண்ட சாத்திரம், பண்டார சாத்திரங்களின் கொளுவும் இவ்வுறுதிப் பொருளனவேயாம். இனி இவை திருவருட் பெருஞ்செல்வர்களாகிய சமயகுரவர் நால்வர்கள் அனுபவித்தவை, விவேகாதி சர்வசாதன சம்பந்நர்களாகிய ஏனை நாயன்மார்கள் நுகர்ந்தவை, நிஷ்காமாதிகாரிகளாகிய ஒன்பதின்மர் துய்த்தவை, ஞானதான வள்ளல்களாகிய சந்தானுசாரியர் திளைத்தவை, துறவறத்தவராஜ சிங்கமாகிய பட்டினத்தடிகள் அயின்றவை, நின்மல நிஷ்டானுபூதிப் பெரியோர்களாகிய, தாயுமானவசுவாமிக ளாதியர் ஆர்ந்தவை, இப்பொருளின் பகுதியனவாகிய பத்தவதாரத்தையும் பற்றிச் சித்தாந்தசாரபங் கூறுமாறு:—

தத்துவரூபம்.—பிருதிவி முதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்கள் தனுவும், கரணமும், புவனமும் போகமும் செயலும் பிரேரகமுமாய் நின்ற பெருவடிவைத் தனக்கு வேறாகக் காணுமவதாரம்.

தத்துவதரிசனம்.—பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களைச் சுத்தமாயா அசுத்தமாயா மலங்களின் காரியமென்றும், சடபதார்த்தங்களென்றும், தன்னாலே யறியப்பட்டன வென்றுந் தன்னறிவிலே விளங்கக் காணுமவதாரம்.

தத்துவசுத்தி.—பிருதிவிமுதல் நாதமீருன முப்பத்தாறு தத்துவங்களினது விகற்பமாகிய சுட்டறிவுகளிற்ருனில்லாமல் தத்துவங்கள் தன்னைத் தாக்காமல் கானலைத் தண்ணீரென்று கண்டவுடன் கானலென்றறிந்த விடத்துத் திரும்ப விரும்பாதது போலவும் சொப்பனத்தில் யானை யேறி மாலை சூடக்கண்டவன் விழித்த விடத்தது மெய்யாகக் காணுமல் பொய்யாகக் கண்டது போலவும், தன்னறிவிலே கண்டு நீங்கித் தானசைவின்றி யன்னியனு யெங்குநிறைவாய் நித்தியமா யறிவாயுள்ள முறையை யறிந்து நின்றவவதரம்.

ஆன்மரூபம்.—தேசிக மூர்த்தியினுடைய அனுக்கிரகத்தினுல் தன்னையுந் தன்னிடத்திலே பந்தமாயிருக்கிற தத்துவ விவகாரங்களையு மெவ்விடத்திலுந் தோன்ருமல் சகசமாய் மறைந்து நின்ற வாணவமலத்தினையு நீங்கித் தானறியு முறைமையும் அவனுடைய ஞானமறிவுக் கறிவாய் நின்று பகரிக்கிற முறைமையுந் தன்னறிவிலே விளங்கக்காணு மவதரம்.

ஆன்ம தரிசனம்.—ஆன்ம செய்தி யெவ்விடத்திலுந் தோன்ருமல் தத்துவதாத்திகங்களை யெனதென்றும், பசுஞானத்தினையானென்றும் நின்ற வசத்திய போத நீங்கிப் பழைய சிற்றறிவாகிய சுட்டுப் போதங்கழன்று நின்ற வவதரம்.

ஆன்மசுத்தி.—தனக்கெனச் செய்தியில்லாத வான்மா தன்னுடைய சுட்டறிவு எவ்விடத்திலுந் தோன்ருமல் கெட்டுத் தன்னிடத்திலே விளக்கப்பட்ட வனுக்கிரகத்தினுலே தற்பூரண மெல்லாமடங்கித் தன்னுடைய செய்தியெல்லா மனுக்கிரகத்தினது செய்தியாய்த் தன்னை யந்தஞான மடக்கின முறைமையும், தானந்த ஞானத்திலே யடங்கின முறைமையும் எவ்விடத்திலுந் தோன்ருமல் பெத்தத்தினுலே தேகமே தானுயுந் தானே தேகமாகியு நின்ற முறைமைபோல முதல்வனே தானுய் நின்ற வவதரம்.

பரரூபம்.—சடசித்துகளாகிய தாபர சங்கமங்களுளெல்

லாந் தான் வேறறநின்று பெருமை பொருந்தியிருக்கப்பட்ட காருண்ணிய சத்தியே தனக்குத் திருமேனியாகி ஆணவமலஞ் சகசமாயிருக்கப்பட்ட வான்மாக்கள் பாகபேதங்களைத் திருவுள்ளத்தடைந்து தனதிச்சாஞானக் கிரியையின் செய்தியாகிய மாயாதத்துவங்களினால் சிருட்டித்துந் திதித்துஞ் சங்கரித்தும் மலபாக வொழிவிலே யிந்ததத்துவங்கள் வேறும்படிக்குச் சத்திநிபாதத்தை விளைவித்துச் சத்திநிபாதத்தின் வழியிலே புறம்பே கட்புலனுக்குத் தோன்ற மானிடச்சட்டை சாத்தி யெழுந்தருளி வந்து தான் வேறற நிற்கிற முறைமையைத் தருகின்றவன் ஆன்மாக்களுக்கெல்லா மறிவிற்கறிவாயிருக்கிற முதல்வனே யென்று பிரதிக்கினை யேது திருட்டாந்தங்களினாலே மயக்க விகற்பமறத் தன்னறிவிலே விளங்கக் கண்டு நின்ற வவதரம்.

பாதரிசனம்.—ஆன்மாவென்ப தெவ்விடத்திலுந் தோன்றாமலென தென்றும் யானென்றும் நின்ற வசத்திய போத நீங்கத் தேசிக மூர்த்தியினுடைய அனுக்கிரக ஞானம் பிரகாசித்து நின்ற வவதரம் முதல்வனுடையபாதம்; தன்னையுணர்த்தும் பகுதியாகத் தாக்குவதான விடய போகங்களையவனவளதுவாய் நோக்குமிடமெல்லா மவனுடைய அனுக்கிரகத்தையே கண்டனுபவிக்கு மவதரம் முதல்வனுடைய திருமுகம்; அந்த வனுக்கிரகத்திலே தற்செயல் தோன்றாமல் பரவசப்படு மவதரம் முதல்வனுடைய திருமுடியா மென்றறிந்து இந்த வுண்மையினைச் சந்தேக விகற்பமற வுள்ளபடி விசாரித்தறிந்து, இதுவல்லாமற் சத்தியமாயுள்ள பொருள் வேறேயுமொன்றில்லை யென்று தெளிந்து எனதியானென்னும் விகற்பமாகிய பிருதிவி முதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட சகலாவத்தையிலும் பொருந்தாமல் இந்தக் கருவிகள் நீங்கினாற்றனக்குள்ள சகசநிலையாகிய கேவலாவத்தையிலும் பொருந்தாமல், இந்தக் கேவல சகலமிரண்டு நீங்கினவிடத்து விளங்குவதான போதபூரணமாகிய அகம்பிரம ஞானத்திலும் பொருந்தாமல் தேசிகமூர்த்தியினுடைய அனுக்கிரக ஞானத்

திலே தற்பூரணமெல்லா மடங்கித் தனது செய்தியெல்லா மவன தனுக்கிரகஞான சத்தியினுடைய செய்தியாய் அறிதற்கரிதாகிய மேலான பூரண வின்பந் தோன்ருமலேகதேச வியாபாரமாகிய தனுகரணுதி யின்பமே தோன்ற அந்த வின்பங்களேயே மெய்யென் றனுபவித்து நின்ற முறைமை போலத் தனுகரணுதி யின்பமெவ்விடத்திலுந் தோன்ருமல் பூரண வின்பத் தொடர்ச்சியாகிய தேசிகமூர்த்தத்தினனுக்கிரக ஞானத்தினை யெவ்விடத்திலுங் கண்டனுபவிக்கு மவதரம்.

பரயோகம்.—சடசித்துக்களிரண்டினு நின்று விளங்குவதாகிய இதாகிதங்களுக்கேற்ற சத்தாதி விடயங்களிலேயெந்த விடயங்கள் வந்து தாக்கினுலும், அந்த விடயங்களையெதிரிட்டுப்பார்த்து இதுமாயாகாரியமான தனுகரண புவன போகங்களினது விகற்பமென்று மிந்த விடயங்களினின்றும் விளங்குவதாகிய இதாகிதங்கள் கன்மத்தினது விகற்பமென்றுங் கண்டு தனக்கெனச்சற்றுஞ் செய்தியில்லாத சடரூபமாகையினுலே தானுகச்செய்தி வறியாது, அந்தவிடயங்களையதுவதுவாகப் புசிக்குமான்மாவை நித்தியனுய்ப் பூரணனு யறிவாயிருந்தாலும் தானுக வொன்றையு மறிதற் கறிவில்லை யென்னு முறைமையை யுள்ளபடி தரிசித்து, அந்த ஆன்மாவினது அறிவுக்கறிவாய் நின்று இந்த விடய போகங்களை யிடைவிடாமற் பாகமறிந்துணர்த்தி நிற்கிற திருவருளையு முள்ளபடி தரிசித்து அந்த வருளினது நிறைவெல்லாந் தனது வடிவாகவுடைய பூரண வின்பமெனக் கண்டித்துக் குருமூர்த்தமா யெழுந்தருளி மானிடச் சட்டை தரித்து வந்துபதேசித்த வனுக்கிரகத்தை யுள்ளபடி தரிசித்து, இவ்விடத்திலே வந்து பொருந்தப்பட்ட சத்தாதி விடயங்களை யெல்லாமந்த வனுக்கிரகத்தினுலே பொருந்திப் பார்த்து, இந்த விடய போகங்களின் வழித்தாய்த் தீவினையைச் செய்விக்கிறது மனுக்கிரகமாகிய திருவருள்தானே, இந்த நன்மை தீமைகளை யறியும்படிக்குப் புசிப்பாகிவந்த

விடயபேதங்களு மவ்வனுக்கிரகமாகிய வருள்தானே யென்றுள்ளபடி தரிசித்து, இந்த முறைமையே யன்றிச் சித்தாகிய வான்ம வர்க்கத்திற்கும் சடமாகிய பாச சாலங்களுக்கு மொன்றை யொன்றறியவு மொன்றை யொன்று பொருந்தவுமொரு சற்றுஞ் செயலில்லையென்னு முறைமையை யுள்ளபடி தரிசித்து அந்தப்பொருளோ டிசைவதாகிய வவதரம்.

பரபோகம்.—எத்தகைய தொழில்களைச் செய்தாலும் தற்செய லெவ்விடத்திலுந் தோன்று மலனுக்கிரகமாகிய வருணிறைவிலே வேறற நிற்கில் அந்த வருளுக்கு முதன்மையாகிய நேய மவன தறிவு பூரணமெல்லாந் தனது வடிவாகக் கொண்டு தானந்த வறிவு பூரணத்திற்கெல்லா முயிராய் இவன தறிவு தொழிலாகிய விந்திரிய போகங்களாய் வரும் புசிப்புந் தொழிலுந் தனது புசிப்புந் தொழிலுமாகவே புசித்துத் தொழிற்படும் நானுவிதமாகிய போகங்களையெல்லா மிவனுக்குத் தனது பூரணவின்பமாகிய நேயவடிவாகவே காட்டி இவன தறிவு பூரணமெல்லாந் தனதின்பப் பூரணமாகவும் தனதின்பப் பூரணமெல்லா மிவனதறிவு பூரணமாகவும் வேறறத்தோன்றி நின்று தனதின்ப நிறைவெல்லா மிவனதனுபோக பூரணத்தை யமிழ்த்தி நிற்குமவதரம்.

'ஆடவ ரரிவையர் தம்மின், மிக்க வந்தரங் கத்தவர்பெற்ற, இன்பமு முரையில ததனு, லந்த ரங்கமன் மைந்தமல் பறியே' (ஞானு 65) என வுரைப்பக்கிடந்த இவ்வசாத்தியச் சாத்தியப் பொருளைக்கூறப் புகுந்தார் இக்கிரந்த கர்த்தா. இவரை யன்றி இத்தசகாரிய நூலியற்றினுர் திருவாவடுதுறை யாதீனத்துப் பிரதமாசிரியருக்குப் பின்வந்த அம்பலவாண தேசிகர், துவிதிய தக்ஷிணுமூர்த்தி தேசிகர், திருவண்ணுமலையிற் பரிபூரணமுற்ற ஈசான மடாலயத்து இலக்கணக்கொத்துச் சாமிநாத தேசிகர் என்பார் மூவர் அந்நூல்களுட் சில பாசுரம் இவ்விடத்து வரைவல்.

அம்பலவாண தேசிகர்.

அனைத்தையுந் துறந்தோ மிந்நா
ளியாவர்க்கு மேலா மென்ன
நினைத்திட லுயிர்க்கு ரூப
நீநெடு நாள தாகச்
செனித்தனை நரகி னின்றுந்
திளைத்தனை தெளிந்து சற்று
முனைத்தனி நினைந்த தில்லை
யுறுஞ்செய லருள தென்றோர்.

தக்ஷிணாமூர்த்தி தேசிகர்.

சற்குருவி னருளாலுந் தவமுடிவின்
பயனாலுஞ் சனன நீங்கிச்
சிற்கனவாழ் வடைந்ததற்கே சிந்தைசெயுந்
திறமுடைய சீல ராகி
நிற்குநிலை சாதனங்க ளொருநான்கு
மாசறவே நீந்தி யோக
வர்க்கமொடு சகலகலை யுந்தெரிந்து
ஞானநெறி வருவ ராமால்.

திருவண்ணாமலையார்.

தத்துவ மனைத்து நோக்கித்
தனித்தனிச் செயல்கள் காண்ட
லொத்ததன் னுருவ மாகு
மொன்றையொன் றுணரா தீது
சத்தியஞ் சடமே யென்னத்
தானறிந் திடுதல் காட்சி
நித்திய மன்று சின்னா
ணீங்குத லென்றல் சுத்தி.

இத் திருநூல்களுக்கு ஆதாரமாகிய முதற் றமிழ்நூல் உண்மைநெறி விளக்கம். இஃது ஆறு திருவிருத்தங்களால் கொற்றவன்குடி உமாபதிதேவ நாயனாரால் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசித்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகமென்னும் தசகாரியங்களை விளக்குதற்கெழுந்தது.

இனி நமது தசகாரியநூல் காப்புளப்படப் பாயிரமுதல் சிவபோக மீறாப் பதினேழு அத்தியாயங்களையும் நூஉ திருவிருத்தங்களையும் கொண்டது. இதன் பெருமை யாவும் பிரம்மஸ்ரீ டாக்டர் வை. வே. ரமண சாஸ்திரிகள் எம். ஏ, டி. பி. எச், அவர்கள் செவ்விதின் விரிவாக இந்நூல் ஆங்கில முகவுரையிற் கூறி இருத்தலின் விரிவஞ்சிவிடுத்தேன். இனி இந்நூலின் அருமையும் என் சிறுமையும் பாராது இதற்குப் பாயிரங் கூறுவான் புகுந்த என் குற்றத்தைப் பொறுத்தருளும்படி ஈண்டுப் பெரியோர்களைப் பிரார்த்திக்கின்றேன்.

3. பதிப்பித்தோன் திறன்.

இதனைக் கூறுமுன், இந்நூலாசிரியர் குலத்தினவர் வசித்த இடத்தைச் சற்று கவனித்தல்வேண்டும். ஸ்ரீ வன்மீகநாத தேசிகர் Iம், அவர் பின்னோரும், அவர் தனயர் சதாசிவ தேசிகர் I தியாகராஜ தேசிகர் II-ம் திருவாரூரின் கண்ணும், சிதம்பரநாத தேசிகர் I-ம், வன்மீகநாத தேசிகர் III-ம் குளம்பேட்டையிலும், வடுகநாத தேசிகர் சீகாழியிலும், தியாகராஜ தேசிகர் III சூரியங்கோட்டையிலும், சிதம்பரநாத தேசிகரை II யுள்ளிட்டார் மணிவிளான் வயலிலும், சூரியமூர்த்தி தேசிகர் திருக்களரூரிலும், சதாசிவ தேசிகர் III திருவாரூரிலும் வசித்தனர். கடையிற் கூறிய தேசிகோத்தமர் திருத்தணிகைச் சரவணப் பெருமாளையரிடத்தும், கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடத்தும் கல்விபயின்று தருமபுர வாதீனத்து மகாலிங்கக்குட்டி யென்னும் மாணிக்கவாசக தேசிகருக்குச் செந்தமிழ்ப் போதகாசிரியராகியும், நியாய சாஸ்திர பரிக்ஷையிற்

றோர்ச்சியடைந்து தரங்கம்பாடியில் நியாயஸ்தல நியாயவாதி அலுவல் பார்த்தும் வந்தார். அக்காலத்துத் தமக்கு ஆண்மக வின்மையின் சிவஞான பாலைய சுவாமிகளை வேண்ட அம் மகானது அனுக்கிரகத்தாற் சிவஞான வன்மீகத்தேசிகரென்னும் ஜேஷ்ட புத்திரர் உதித்தார். அவர் பின்னோர் சோமசுந்தர தேசிகரே இந்நூலைப் பரிசோதித்து அச்சிற் பதிப்பித்தோர். வமிசாவலியிற்கண்ட சுந்தரவல்லியென்னும் மாது சிரோன்மணியின் கேள்வர். திருவாரூர்ப் பன்மணிமாலையை அச்சிடுவித்தவர். இந்நூலைப்போலவே இக்குடும்பத்தினரது நூல்கள் பலவற்றையும் விசேடமாகத் திருமுல்லைவாயிற் புராணத்தையும் பிரசுரிக்க விருப்பமுள்ளவர். அவரது பெருந் தகுதியையும் அன்புடைமையையும் எக்காலும் எண்ணியிருத்தலையன்றி அவருக்கு நம்மாற் செய்யப்படும் கைம்மாறு யாது?

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

இந்நூல் இந்நிலவுலகினருக்குப் பெரும்பயன் புரியுமாறு திருவருள் சுரக்கும்படி எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளாகிய திருச்சிற்றம்பல முடையான் திருவடித் தாமரைகளை மன மொழி மெய்களால் வணங்குகின்றேன்.

பாடாண்-புகழ்ந்தனர் பரவல்.

மாதர் பிறைக்கண்ணி வானதி தோய்சடில
போதமர் நின்னடி போற்றுதுங்—காதல்
விரவுநீர் ஞாலத்து வெவ்வினை நீங்கி
யுரவுநீர் கோடற் குவந்து.

தருமசம்வர்த்தனி விலாஸ்
தரங்கம்பாடி,
பிரமாதிசஹு
சாபரவி 28உ
ஆதித்தவாரம் திருவாதிரை

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

சூசிபத்திரம்.

தொ.	அதிகாரம்.	பாடற்றொகை.	பக்கம்.
1	பாயிரம் ...	8	1
2	தேசகால பாத்திர விலக்கணம்	8	3
3	சீடனிலக்கணம் ...	8	5
4	சற்குருவிலக்கணம் ...	13	6
5	அசற்குருவிலக்கணம் ...	6	8
6	குருபூசை ...	24	9
7	ஞானதீக்கை ...	41	13
8	தத்துவரூபம் ...	54	19
9	தத்துவதரிசனம் ...	50	27
10	தத்துவசுத்தி ...	10	35
11	ஆன்மரூபம் ...	15	37
12	ஆன்ம தரிசனம் ...	13	40
13	ஆன்ம சுத்தி ...	7	42
14	சிவரூபம் ...	10	44
15	சிவதரிசனம் ...	15	45
16	சிவயோகம் ...	10	48
17	சிவபோகம் ...	10	49
	ஆகவதிகாரம் 17-க்கு ...	302	

சிறப்புப்பாயிரம்.

மலர்தலை யுலகின் மல்கிரு ளலகப்
பலகதிர் பரப்பும் பரிதியே போலப்
பல்வகைச் சமயத்தினு யரியசமயந்
திங்க டங்கிய பொன்னெடுஞ் சடிலனை
வழிபடுவஃகிய மெய்யென் றுரைக்கு
மாகம மதனை யையந் திரிபற
வோதி யுணர்ந்த மெய்யன் புடையான்
மூப்பழ கால்முதிர் திருவந்திக்
காப்பழகிசைந்த கமலைத் தியாகர்
மலைமக டன்னொடு மகனெனும் வேளொடு
மரியணை மிசையே யமருமா ரூரில்
வன்மீக நாத மா தவன் வரத்தால்
வந்தருள் செல்வன் வைத்திய நாதன்
குமாரரி லிளைய குமாரனே யாகுஞ்
சிதம்பர நாத தேசிகோத் தமன்று
னுரைத்தனன் றசகா ரியமெனு நூலே.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

தசகாரியம்.

காப்பு.

உழிதர வியைந்த காய வோங்கலிற் காம மாதி
கழிபெருங் கதிரெ ரிப்பக் கனன்றுளம் வருந்து வேனை
வழிமது வொழுகுந் தண்டா மரையடி நீழல் சேர்க்கும்
பொழிமதக்கலுழிநால்வாய்ப்பொருப்பினை விருப்பஞ்செய்வாம்.

பாயிரம்.

சிவம்.

சீராரும்பேரண்ட மௌலியாகச்சிறந்தசுடரொருமூன்று நயன
மாக,வோராருந் திசையெட்டுங் கரங்க ளாக வேழ்தலத்தின்
மாசுணங்க டாள்க ளாகப், பாராரு முயிர்களுள மரங்க மாகப்
பரமுத்திக் கானதொழி னடனம் பண்ணிக், காராரு மலமாதி
யறிஞர் நல்கக்கண்டுகளிகூரரனைக் கருத்துள் வைப்பாம். (௨)

சத்தி.

இலையமுத லானதொழிலமலனேவ
விறையுருவாம்விந்துவிடை யியற்றித்தானு.
மலையாதே யநந்தாதி யீசர்க்குள்ள
வறிவுதொழின் முழுதினையுமளித்துப் பின்னைக்
கலையாதி மாயையினைக் கலக்கி யாக்கிக்
கரியமல மாயைவினை கழித்து நாளுந்
தலையானவானந்த முயிர்கட் கீயுஞ்
சாம்பவிதாட் கமலமலர் தலைமேல் வைப்பாம். (௫)

மற்றைத் தெய்வங்கள்.

எண்ணரிய வுயிர்கள்வினைப் பிறவி நீங்கி
யியல்பாகும் பேரின்ப மெய்த நல்குங்
கண்ணுதன்மெய் வடிவான கருணைஞானக்
கனங்குழையைப் புணரவருங்களிற்றை வாழ்த்தி
நுண்ணியநூ லகத்தியனுக்குரைக்கு முண்மை
நோன்மைவடி வேலவனை யுளத்தே நோக்கிப்
புண்ணியமே வடிவான நந்தீ சாதி
பொருவிலருட் குரவரையும் போற்று வாமே. (௭)

சத்தியஞான தரிசினிகள்.

ஒருரும் பேரும்வடிவொன் று மில்லா
னுன் மனையினந்தியத்தி னுறைதலின்றிக்
காருரு மலங்கரும மாயை நீங்கிக்
கண்டுயிர்க டமதுகுணங் களிப்ப நாளும்
பேருருந் திருவுருவுங்கொண்டு பூவிற்
பேசுபுகழ்ச் சிவபுரத்தில் வந்தபெம்மான்
பாரோர்கள் புகழவருஞ் சத்திய ஞானி
பதமலர்களிதையமுறப் பணிதல் செய்வாம். (௮)

குருவணக்கம்.

ஏர்திகழுந் தத்துவத்தி னுருவ மாதி
யியம்பவுயி ரெழுபிறப்பு மியங்காதெண்ணிக்
கார்திகழுங் கந்தரமுங் கங்கை யாறுங்
கண்ணுதலும் பெண்ணிடமுங் கரந்து மாக்கள்
சார்புகொடு வந்தருளி யெம்மை யாண்ட
சந்திரசே கரன்கமலத் தாள்கள் போற்றிச்
சீர்திகழு மாகமநூற் படியே யுண்மை
தெருண்டவர் பதமலர்கள் சிந்தைசெய்வாம். (௯)

அவையடக்கம்.

அனாதிமல மாயையாமுத லான வெல்லா
மாருயிரை நீங்கியிடா தமர்ந்த வேனு
மெனாதிதுக ளினைநீக்கி யதனைச் சேர்ந்த
வெண்குணத்தாற் கைக்கொள்ளு மியல்பே யென்ன
வினாதவுரைக் குற்றமறுத் தென்னையாளு
மிருந்தவர்க ளிந்நூலை யெடுத்துக்கொள்வர்
மனாதியினுக் கெட்டாதவமலன் கூறும்
வடகலையின் பொருளிதனின் மருவ லாலே. (எ)

நூல் செய்தற்குக்காரணம்.

திருவாருங் காமிகமே யாதி முன்னஞ்
செப்புதச காரியத்தி னுட்ப மெல்லாங்
குருவாலே யுணர்ந்தவற்றைக் கோவை செய்து
குவலயத்தி லாகமநூல் கல்லா மாந்த
ருருவான மாயைமுத லான வெல்லா
மகன்றுதம தறுகுண்மா ஞான நந்தப்
பெருவாழ்வு பெறத்தமிழின் செய்யு ளாக்கிப்
பேசுவன் கேளாசகலப் பிறப்பற் றுயே. (அ)

பாயிரமுற்றும்.

தேசகால பாத்திர விலக்கணம்.

ஐயிரு பகுதி யான வாகமப் பொருளைக் கூறு
மையறு தானம் யாது வாய்த்தநற் காலம் யாது
சைவரில் யாவர் கேட்குந் தகுதிய ரென்று சாற்றத்
தெய்வமா முனிவர் போற்றுஞ் செழுந்தவக் குரிசில் செப்பும்.
மதிதவழ் குடுமித் தெய்வ மகேந்திர மலையம் விந்தம்
விதியரி யானு மேவு மேருமந் தரமே ஞான
யதிமுனி வரர்சூழ் பாரி யாத்திரம் பருப்ப தாதி
கதிதரு மலைய னைத்துங் கழறிட மாகு மன்றே. (உ)

சுத்த வெண்டிரைசுருட்டிச்சுடர்மணி வரன்றி யெங்குந்
தத்து தீம்புனல்பாய்கங்கைத்தடத்தினில்யமுனை யாற்றி
னித்திலமணிகொழிக்குநிருமதையதனிற்றுங்க
பத்திரையதனிற்றெய்வப்பரநதிக்கூலந்தன்னில் (௫)

பூந்துணர்ப்பொதும்பர்சூழும்புண்ணியப்பொன்னியாற்றிற்
சாந்தமுந் தென்றற் கன்றுந் தமிழொடுந் தயங்குமோங்கல்
வேந்தனு முனிகொணர்ந்த விரிதிரைப் பொருனையாற்றிற்
கூர்ந்தமா தவத்தோர் போற்றுங் குமரிமா நதிதீ ரத்தும். (௬)

கடுவொடுங்கெயிற்றுத் துத்திக் கட்செவிப்பகுவாய்ப்பாந்தண்
முடிமிசைக் கிடந்த ஞால முதுமக ளிதைபப் பூவின்
வடிமது வனைய காசி மாநக ராதி யாய
பொடியணிமேனிப்புத்தேள்பொருந்துநற்பதியனைத்தும். (௭)

நாமநீராழி புல்லு நதிப்பெருங் கரையிற்றூய
வேமமா ரோடைத்தீரத் திணை மலர்நந்த னத்துஞ்
சேமமார் பான்மரத்தின் றிருப லி நீழறன்னிற்
காமனு ருடல்பொடித்த கண்ணுத லால யத்தும். (௮)

இருண்மல வலிதொலைக்கு மிருந்தவர்மடத்தும்பத்தர்
திருவளர் மந்திரத்தும் தேசிகர் மனத்துக் கேற்ற
குருவள ரிடத்து மிந்நூல் கூறலா மென்று தெய்வ
மருவளர் குமுதச் செவ்வாய் மலைமகட்கிறைவன் சாற்றும். (௯)

சாற்றுமித் தலத்துதக்கிற் சார்ந்திடிலிரவி யிந்து
வேற்றிளம் பருவமாகிக் கிளர் தரு முதற்பக் கத்தி
லேற்றநற் றினமே கால மியம்புகா ரகங்கண்மூன்றி
னூற்றமார் சாம்ப வத்தை யுறுமவர் கேட்கு நீரார். (௧௦)

தேசகால பாத்திர விலக்கண முற்றும்.

ஆகத்திரு விருத்தம். ௧௬.

—o:*:o—

சீடனிலக்கணம்.

விற்பொலி நுதற்சிறிய மின்னிடையோர் பாக
வற்புதநல் லாகம மனைத்துமருள் செய்த
சிற்பரம மூவகைய தீக்கையினி லாக்கை
யுற்பவமில் சாம்பவ முரைத்திடுக வென்ன, (௧)

வேறு.

அறிதவ சாம்பவத்தை யறைகுவன் கேள்வி சிட்ட
நெறிதரு ஞானநல்கு நீர்மையாற் றென்றுதொட்ட
வுறவறு தீக்கைக்கெல்லா முத்தமமா தலாலே
மறுவில்விஞ் ஞானதீக்கை யாமென மதிப்பர் மேலோர். (௨)

அற்றவா சமயமாதியாவண மியற்றுங்காலைச்
சொற்றரு மனுக்க ளூனந் தொழிலிடை விட்ட தூன
முற்ற பாவனையி லூன மொழித்திடு மாத லாலே
பற்றறு தவத்தோ யீது பவித்திர மனைகட் கெல்லாம். (௩)

கழிவரும் பத்தி யுள்ளான் கருணையா ரியனைக் கண்ட
பொழுதவன் மேனி யெல்லாம் புளகம்வந் திடவு ரோமம்
விழிமழை பொழியக் கம்ப மேவிட மூர்ச்சித்தாங்கு (௪)
வழுவறுங் குரவன்கூறும் வார்த்தையிற் செவிவைத் துள்ளான்.

அந்தவாய் மொழிநி னைந்தே யகத்தினின் மகிழ்ச்சிபொங்கப்
பந்தமில் குரவ னிட்ட பணிசுக துக்க மேனுஞ்
சிந்தனை யொருப்பா டுற்றுச்செய் துமண் மகன்ற னூழி
வந்திடும் புதுமண்போற்றன் வசமறவொழுகுவானே. (௫)

சுடரொளிமணிச்செஞ்சூட்டுத் துளையெயிற்றலையெயிற்றுப்
படவிரி விடையிற்றீவாய்ப் பல்பொறிப் புலிக்கு ழாத்துட்
கடல்வயின்மணிகொ ழிக்குங் கங்கையின் வீழ்கென்று லு
மடல்புனை குரவன்கூறு மருண்மொழி மறுதுசெய்வான். (௬)

அளவறுபொருள்களெல்லா மாழிநீருய்த்துச் சித்தந்
தளர்தலை யொழித்துநம்மைச் சார்திநீ யென்னிற் சார்ந்து
மிளமகன் றந்தை தாய ரிலமுடன் பிறந்தார்மற்று
முளபல கிளைகளெல்லா மொழித்திநீ யெனிலொழித்தும். (௭)

விட்டநின் இளைஞரோடே மீளவுங்கூடென்றோதி
லிட்டமாயவரோ டொன்றி யிரண்டறவொழுகுவானே
சிட்டனுஞ் சம்புவாற்செய்தீக்கையைப் பரிக்கவின்றே
மட்டவி ழிதழித் தாரான் வகுத்தவா கமங்கள் கூறும். (அ)

சீடனிலக்கணமுற்றும்.

ஆகத் திருவிருத்தம். உச.

சற்குரு விலக்கணம்.

என்றுநற் குரவன் கூற விருந்தமா ணக்கன் றானு
நன்றிதுமொழிந்தாய் தெய்வ ஞானதே சிகன்றனுண்மை
யின்றெனக் கருளவேண்டுமென்று முன்பணிந் தெழுந்து
நின்றனனவனைநோக்கி நிமலவர்க்கருளிச் செய்வான். (க)

இருவிதமாகத் தீக்கை யியற்றுமெம் மிறைவன் றானு
மொருவித முயிரு ணின்றே யுஞற்றுமா தார மின்றி
வருமல மலகன் மங்கண் மன்னிய விரண்டுபேர்க்குங்
குருவரு ளுருவ மாகிக் குயிற்றிடுஞ் சகலர்க் கென்றே. (உ)

கறையணற் கவைநாத் துத்திக் கட்செவிப் பகுவாய்ப் பாந்தட்
கிறைபஃ றலைதொட் டோடு மெறிதிரைக் கங்கை யாதி
குறையறு நதிதீரத்துக் கூறுநாற் குலத்திற் றோன்றிப்
பிறையணி மௌலிப் புத்தேள்பேசுநூ லனைத்துங் கற்றே (ங)

அழிதக ஞகுமுலோக வாயத ஞதிதீய
வழியுழன் முடர்தம்மை மறுத்தறநிறுத்தித் தெய்வச்
சுழிபடுங் கங்கை யோடே சுடர்மதி மிலைச்சு மெங்கோன்
மொழிபெருஞ் சரிதையாதி முழுவதுமுணர்ந்துசெய்தே. (ச)

கொலைபுரியாமை யுண்மை கூறியே யுயிர்கட் கெல்லாந்
தலைதரு மருள்வைத் துள்ளான் சாந்தமும் பொறையும்பூண்டு
கலைநவில் வினைக்கீ டாகக் கனுழநிக் கிரகம் பண்ணி
வொலையநுக் கிரகஞ்செய்ய வோங்கிய சதிரு முள்ளான். (ரு)

சமயவா சாரத் தோடேசார்ந்துநற் செபந்தி யான
மமைதரு தவமோ மங்க ளர்ச்சனையாதி யெல்லா
மிமையள வதனிற் செய்தே யிறைவநூன் முறையினெல்லா
மமையமு மோதி யந்த வருத்தமே விசாரித் துள்ளான். (௬)

சிறந்தநற் குரவற் காளாய்ச் சேர்ந்துவிஞ் ஞான தீக்கை
யறக்கரைந் தெவற்கு முற்ற வரும்பிணி தவிர்க்க வெண்ணி
மறங்கடிந் திடம்ப நீங்கி மறந்துசெய் குத்திரங்க
டுறந்தவ ராகத் தோடே துயர்செயும் வெறுப்பு மற்றே. (௭)

குறிகொண் மாணுக்கர்குற்றங்குணமெலாமறிதற்கேற்ற
வறிவுநற் கிருபை சீல மற்புசந் துட்டமேவிப்
பிறிதராச் சிவாநுபூதி பெற்றுறுங் கயநோய்குட்டஞ்
செறிவுறு துடற்கணல்ல திருமலி யழகு முள்ளான். (௮)

மமதையாங் கார மையமதியினில் விகற்பந் தீய
தமமிவை தவிர்ந்தெந் நாளுஞ் சாத்திரமுணர்ந்தங்குள்ள
வமைதருபரமார்த்தத்தை யறிந்தவன் குரவனென்றே
யுமையொரு பாகத்தெங்கோனுரைத்தவாகமங்கள்கூறும். (௯)

செப்புமிக் குணத்திலொன்றுஞ் சேர்ந்திலனெனினுமுள்ளே
தப்பறு ஞான வாய்மைசார்ந்தவன்குரவ னாவா
னப்பொழு தவன்றன் னோக்கா லானந்த மறிவிற் றோன்று
மொப்பருங் குரவன்றன்னை யுணர்ந்துநீ யணைந்தி டாயே (௰)

அறம்பொரு ளின்பம் வீடு மளித்திடுங்குரவன் றன்னைச்
சிறந்திடவுணரி னின்னுட்டிரிமல மகல வானின்
புறம்பயிலிரவிகண்ட பொழுதகலிருள் போலன்னோன்
றிறம்பயில் கரத்தாற் றீண்டிற் சிவவடி வாகு மெல்லாம். (௰௧)

உண்டியொடுறக்கங்காம முறுபயனுடையனேனுங்
கண்டகப் புழற்காற்செய்ய கனகமா நிறப்பொ குட்டு
முண்டகத்திலைநீர் தோய்ந்து முயங்கிடா ததுபோற்கன்மம்
விண்டிடுமொதலாலே விமலனே குரவனென்றும், (௰௨)

அவன் மனை விமலை யாகு மருளினா லவமிறீக்கை
பவமுறு நூறுகோடி பாதகர்க் கியற்றினாலுஞ்
சிவனருள் ஞானமுள்ளே செறிந்திடு மாகின் ஞால
வுவமையி னெறியினின்றே யொன்றுவனுண்மையாமே. (௰௩)

சற்குரு விலக்கணமுற்றும்.

ஆகத் திருவிருத்தம். ௩௭.

அசற்குரு விலக்கணம்.

ஞானமில் குரவற்சேர்ந்து நணுகுவராயின் முத்தி
யூனமில் சிலையையூன்றி யொருசிலைகரையிலேறு
மீனமில் ஞானமின்றி யியைந்தவன் குருத்துவத்தை
யானதோர் நரகமெல்லா மடைந்திடு மறிந்து கொள்ளே. (௧)

எவன்குரு வழியின் ஞான மிலாமலே குரவனாகு
மவனென்னை மணலி லூற்று மருந்தேபே ராகாயத்தைப்
பவமுறு பசிநோய்தீர்க்கும் பதம்புனலெள்ளொன்றின்றிச்
சிவசிவ வவன்ற னுள்ளத் திடத்தையார் செப்பு வாரே. (௨)

சாற்றுநூ லறிவொன் றில்லான் சமையவா சார மில்லா
னேற்றதோர் குலமுமில்லா னியம்பு மாச்சிரமுமில்லா
னாற்றல்சேர் காமமாதி யறுகுண மனைத்துமுள்ளான்
பாற்று மேடணைமூன்றூடே பழுதுறு சீல முள்ளான். (௩)

குற்சிதமனமுமுள்ளான் குணமொரு சற்றுமில்லான்
நச்சியே யிழிஞர்மாட்டு நவையுறுபொருள்கை யேற்பான்
எச்சமில் மந்திரங்கள் எழில்பெறு தந்திரங்கள் [லான் (௪)
பொச்சமெய்ஞ் ஞானயோகம் பொருந்தைந்து தீக்கையில்

ஆசையும் வெறுப்புமுற்றே வழகுற வலங்கரிக்கும்
பூசையு மிடம்பத் தாலே புறமுறநடித்துச்செய்யு
மாசுசேர் குத்தி ரத்தால் வயிற்றுறு பசிநோய் மாற்றக்
கூசிடா னாகியார்க்குங்குருக்கொடுத்துழலு வானே. (௫)

இப்படிப் பட்ட வாசா னியற்றிய தீக்கை பெற்ற
செப்பமில் புதல்வர் தாமுந் திளைப்பரே நரக மெல்லா
மைப்படி குருடன் றன்னை மற்றொரு குருடன் பற்றி
யொப்பறு நெறியைக் காணா துழலுமா போல வோய்ந்தே. (சு)

அசற்குரு விலக்கணமுற்றும்.

ஆகத் திருவிருந்தம். ௪௫.

குருபூசை.

ஆதலான் முன்னஞ்சொன்ன வறிவுறுகுரவர்க்காளாய்
மாதவ வுபதேசங்கொண்மற்றது கேட்டிமுன்ன
மோதிய தலத்திற்சென்றே யுஞற்றிமுன்பூபறிக்கை
தீதறு மண்ட பத்தைச் செய்து நாற் றுவாரத் தோடும். (க)

அதனிடை நான்முழத்தினமைத்துவே திகையை யானின்
புதிய நன்மயங் கரைத்த புனலினன் மெழுகி யாங்கே
விதிபெறு கௌவியத்தைவிசிறிநாற் றுவாரந்தன்னிற்
பதியநற் றோரணத்தைப் பரமநூற்படியிற் செய்தே. (உ)

பழுதறு கூலத் தாலும் பலவிதப் பட்டி னாலும்
வழுவறு முத்தி னாலும் வளைத்துமேல் விமானமாக்கித்
தொழுதிவண் டிமிர்பூந் தாராற் சூதபல் லவங்க டுற்று
யழகுறு தருப்பை மாலை யாவரித் திடமீ தார்த்தே. (ங)

மையறு கவரி தூக்கி மடிப்படுதுகில்க ணட்டித்
துய்யதோர் பிறைக்கண்ணடி துவசநற் குடை நிறைத்துத்
தெய்வமெய்த் தூபமிட்டுத் தீபமாலைகளுமேற்றுஞ்
சைவமாமண்ட பத்திற்றமனியப் பீட மீதே. (ச)

திருமலி யுபதேசஞ்செய் தேசிகன்வாச நீரா
லொருமைகொண் மனத்தான் மூழ்கியொளிகொள்பட்டாடை
குருவளர் நீறுபூசிக் கொற்றக் கண் டிகையும் பூண்டு [சாத்திக்
முருகவிழ் தொடையல்சூடி முடித்துநற் றரியச் சந்தி (ரு)

எறிசுடர் மணிகளிட்டே யிழைத்தநூ புரங்கள் சாத்திப்
பிரிவுறு வினைக் கீடாகப் பிறந்திறந் தின்ப முற்றி
யறிவுறு தழல்வீ ரீதென் றரற்றுபூங் கழல்கள் கட்டி
யுறுகடிப் பிணையல் சாத்தி யுதரபந் தனமேல் வீக்கி. (௬)

மறிகடற் பிறந்த முத்து மாலைநல் வயிரக் கோவை
குறிகொண்மா மணிகள்சேர்த்துங் குருச்சுடராரம் பூண்டு
நெறியுறு கடகமாழி யங்கதஞ் சேர்த்துத் தெய்வப்
பொறிவளர் மகுடஞ்சூட்டிப் பொதியமால்வரைச்சந்தாட்டி (எ)

தென்றிசை நோக்குமெங்க டெய்வநாயகனுர்மூர்த்த
மொன்றிட மனத்துளாக்கியொளி கொணற்சுத்தவித்தை
யென்றசீர் மண்ட பத்திலீசர்வா ழிதழெட் டுள்ள
மண்டலங்கமல நாப்பண் வருசதா சிவப்பொ குட்டின். (அ)

ஒன்றிவீற் றிருந்த பின்னருறும்பெரும் புலன்களெல்லாம்
வென்றமா ணுக்கர் தம்மின் மெய்ம்மைகொண் ஞான தீக்கை
குன்றிடா துடையான்முன்னே குளிர்ந்தட்டநதிநீ ராட்டி
மன்றுசெய் கடன்களெல்லா மழகுற வமைத்து வந்தே. (௯)

திருமலியைந்து சுத்தி.செய்தருக் கியந்தா பித்தே
யொருமருப் பினன்றன் பூசை யுஞற்றிநற் றிரவியத்திற்
பரிவுறு நீர்தெளித்துப் பதார்த்தத்தை ஞானநோக்காற்
குருவுருவத்தைத்தன்னுட் கோகனகத்தில் வைத்தே. (௰)

இருள்கெடப்புறம்பே பூசைக்கியற்றுமாபோலியற்றிக்
குருவருள் பெற்றுப்பூசை குயிற்றிடவிருந்துமுன்பே
யிருபதமலருங் கைபா லேந்திமஞ் சனஞ்செய்வேதி
மருவளர் கமலப்பூவின் வைத்தருச்சனைமுன் செய்தே. (௰௧)

கந்தநற் றயிலத்தாலுங் கவ்வியத்தாலு மாட்டிச்
சந்தமார் மதுக்கள்கூட்டித் தாபித்தவமிழ்தந்தெங்கின்
வந்தநீர் பலசாரங்கண் மலையநற் சாந்தநீரு
மெந்தைதாளிணையிலாட்டி யிடையிடைகுளிர்ந்தநீரும். (௰௨)

அருக்கிய நீருமாட்டி யழகுடனுலர்ந்தசுத்த
விருப்புறு திருவொற்றுடை விரைவுடன் சாத்திமற்றோர்
திருப்பொலிபீடமீதே செழுமடிவிரித்து நாப்பண்
மருக்கமழ் சாந்தம்பூசி வரைந்ததிற் பிரணவத்தை. (௰௩)

நமவெனு மெழுத்துள்ளாக்கி நறைகமழ் மலர்குவித்தே
யுமையரனுருவமாக்கி யோங்கிய தாளிரண்டு
மமைவுறவிருத்தியாங்கே யழகுசெய் கலவைச்சாந்த
மிமையவர் மகிழ்பூந்தாரோ டிலங்குபட் டாடைசாத்தி. (௰௪)

நறைகமழ் தூபதீப நல்லவான் பாலளாவி
குறையறு சருத்தாம்பூலங் கொடுத்துமற் றுபசாரங்கண்
முறைவழுவாதே செய்து முன்பணிந்தெழுந்து நின்று (௰௫)
சிறையுடற்பொறையைத் தீர்க்குந்தேசிகபோற்றிபோற்றி.

ஒருமலமுடையார் தம்மையுயிர்க்குயிராகியாண்டு
மிருமலமுடையார் தம்மை யிச்சையாலளித்துந்திய
திரிமலமுடையோர்க்காசத் தீவகமாகிவந்து
கருவழி சுழலாவண்ணங் காத்தருள் குரவபோற்றி. (௰௬)

ஆலின் கீழிருந்து முன்னா ளருந்தவர் நால்வர்க்காக
நூலுரை செய்தாய்போற்றி நொய்யனேன் றனக்காயிந்தச்
சீலமார் மண்டபத்திற் சேர்ந்து வீற்றிருந்துபண்டை (௰௭)
மூலநோய்களைந்தாய்போற்றி முனிவனேபோற்றிபோற்றி.

வன்பெரும் பூதவாக்கை மண்டலநுனியதாய
துன்பமின்ன கரமுள்ளே சொலித்திடும் பரதேகந்தா
னன்பர்கள் போற்றுந்தெய்வ வாலயமதனில் வாழு (௰௮)
மென்பெரு முயிரேயாக்கை யெனவுறைந்தருள்வாய்போற்றி.

துன்பமா ராண வத்திற் றுதைந்தெழு திமிரத் தாலே
யின்பமார் விழியிழந்தவெனக்கு மெய்ஞ்ஞானமென்னு
மன்புறு சலாகை நல்ல வஞ்சனத்தாலே தூய (௰௯)
வென்பெரு விழிகண் ணாளும் விளங்கிட வருள்வாய் போற்றி..

உரியவாதார சத்தியூர் மூதனுதமீருய்
விரிவுறு புவனமெல்லா மேவியே போகந்துய்ப்பித்
தரியசீர் மாயைகன்ம மாணவ மகற்றியென்னைத்
தெரிவுறவெனக்குத் தந்ததீர்த்தனே போற்றிபோற்றி. (உ௰)

இருவினையாவியீச னில்லையென் றியம்பித்தீய
வருவினை புரியுலோக வாயதனுதியோர் செய்
திருவிலா நெறியிற்புக்குச் சேர்ந்துகீழ் நடுவே மீண்டுங்
கருவழி சுழலாவாறு காத்தருள்கடவுள் போற்றி. (உக)

நின்னது சத்தியாலே நீடுலகனைத்துந்தந்து
பன்னுவித் தழித்துமீட்டும் வந்திடவருள்வாய்போற்றி
யென்னுயிர்த் தலைவாபோற்றி யிருண்மலமடங்கநாயேன்
சென்னியிற் பாதஞ்சூட்டுந் தேசிகபோற்றிபோற்றி. (உஉ)

கலைதொறுந் தத்துவங்கள் கவினுறுபுரங்கண்மிக்க
மலைவறு மக்கரங்கள் வருபதமந்திரங்க
ணிலைபெற விருத்தியெல்லா நினைந்தற நீக்கிக்கன்மத் (உங)
தொலைவினின் மூலநோயின் றொழிலையுந்தடுப்பாய்போற்றி.

என்றே துதித்துப்பணிந்தவன்ற னிணைத்தாண் மலரைச்
[சென்னியினுங்
குன்றுவருள் சேர்விழிகளினுங் கோடாமுகத்து மிதையத்துந்
தன்றாழ் கரங்களாலணைத்துத் தயங்கும் பீடத்தினிலமைத்து
நின்றே யவன்றனருளோங்கி நெறியாற்றொழுது விடை
[பெற்றே (உச)

குருபூசை முற்றும்.

ஆகத்திரு விருத்தம். ௬௭.

—∞—

ஞானதீக்கை.

உண்டே னெருநற் பகலொருகா லுறுபேர் நிசியிலானைந்துங்
கொண்டே துயின்று புலர்வதன்முன்குறித்தேயெழுந்துபுனன்
[மூழ்கி
யண்டா திபன்ற னருளாலே யழகா ரற்றைக்கட னனைத்துந்
தண்டாதியற்றியுணலொழிந்து தருவான் றுளிப்ராசாதம்போல்.

எழிலார் குறவனருணோக்க மெஞ்ஞான் றருளுமென்றென்று
தொழுவானிருந்த தாபசரைச் சூழ்வானகலான் முன்னின்று
விழுவானெழுவான் மொழிகுழறி விழிநீர்பொழியக்கம்பித்தே
யழுவானிடைவந்தானைந்து மழகார்மனுவோடளித்தலுமே. (௨)

அருந்தி முக்காலிடையிடையே யாசமனஞ் செய்தருள்வழியே
பொருந்தியுள்ளேபோதகன்முன்போதமறவேவிழுந்தெழுந்தங்
கிருந்த குரவன்றனைநோக்கி யிருகூர்விழிநீர் மழையெனவே
சொரிந்த புதல்வன்றனைத் தெய்வத்துயரு நோக்காற்சுத்தி
[செய்தே. (௩)

தெளித்தே நீரையத்திரத்தாற் சிவமாங்கரமு முடிமீதி
லளித்தேயவன் றனிதையமுதலைந்தா தாரத்தவ்வுருவங்
களித்தே நினைந்து தன்றலைமேற் கவினார்குருமண்டலநடுவே
துளித்தேனரும்பு மாயிரஞ்செந்தோட்டுக் கமலமலர்மீதே. (௪)

திருவருளுருவாயாசான் செம்மலரனைய செவ்வி
யிருவிழி யிருந்திண்டோள்களெழிறிகழ் செம்பட்டாடை
பருகு தேன்பிலிற் றுதேதார் பலமலர் செஞ்சாந்தோடே
மருவிமாமணி யிழைக்கும் மகுடமீதுற நினைந்தே. (௫)

அன்னாயகன்*சேவடிபோற்றி யணைந்தேயவன் றனுக்கிரக
முன்னுளமைந்த குண்டலவுரு மூலாதாரத் தனலெழுப்பித்
தென்னார்புருவத்திடையடையுந்தேயாமதியின் சுதைநெய்யாற்
றன்னார் மனமும்புத்தியுமேசாருஞ்சுருக்குஞ்சுருவமுமாய். (௬)

* அந்நாயகன் என்பதை நோக்கி அன்னாயகன் என்றெழுது.

சீரார் கலைகள் சமிதையெனச்செறியு நாதத் தருப்பையினு
லோரா கிருதசுத்தியினை யியற்றி முன்னே யிருத்தலினு
லோரா வழலின்முகமதனை யுஞற்றுதொழிந்தே யோமத்தைத்
தாரார்சத்தி மயமாகுஞ்சாத மனுவா யியற்றிடின். (எ)

திருவருள் பெறுமா ணுக்கன்றேகத்திற்பூந்த தானத்
தருவமா மந்திரங் களணிபெறு பதம்வன் னங்கள்
வருபுரந்தத்துவங்கண் மருவியகலையொவ்வொன் றின்னைபெற
நிறுத்தி வேறாய் நீங்குமாறோமஞ் செய்தே. (அ)

சிவமனு வதனுலுள்ளந் திருத்தியா மளவுமோம
மவமறவியற்றி மற்றவங்க மந்தி ரங்கட் கெல்லாம்
பவமறப் பத்துக்கொன்று பரிவுறவளித்துப் பின்னைப்
புவனநய கன்மூ லத்தாற் பூரணுகுதி புரிந்தே. (கூ)

அழலிடைமூலா தாரத்தானருட்சத்திமேவு
மெழிறிகழி யோகத் தன்னுரிடத்தினிற் புதல்வனுவி
வழுவறவாங்கி யோனிமன்னு வித்திட வமைத்த
லழகமரீது சங்கமமாமென வறையு நூலே. (ம)

பிரிவுறுமலத்தி னின்றே பிரிந்துருத்திரனுற் காவி
யரியசீர்ப் புதல்வனுதலழகிய கருப்பாதானந்
திருவளர் சுதந்தராதி செறிதரு குணங்களெல்லா
மருவுதருனே புஞ்சவனமென மதிப்பர் மேலோர். (கக)

அருவமா மாயையாவி யறிவுறு விவேகந்தானே
திருவளர்தவத்தின் மிக்கோய் சீமந்தொன்னயனமெல்லாந்
தருசிவ முதலதான சதாசதப் பொருளையாங்கே
மருவியுட் கோடறுனே மதித்திடிற் செனனமாமே. (கஉ)

திரிமலமகன்று தன்னுட் சிவத்துவந் தோன்றுனே
பெரியதோர் நாமமென்றே பேசுவரறிவின் மிக்கோர்
தெரிவுறு சிவத்துவத்தைச் சேருத றன்னைத்தானே
மருவுறு முபநிட்கிரமணமென மதிப்பர் மன்னே. (கங.)

ஞான தீக்கை

பொருவறு பரமானந்தம் புசித்திடலதனைத் தன்னுட்
பிரிவுறா துறையுமன்னப் பிராசனமென்பர் மேலோர்
துரிசறுசிவமே மேலாய்த் தோன்றுதலெவர்க்கும் யாதொன்
றறியதோர் சௌளமாமென் றறைவர் தத்துவ முணர்ந்தோர்.

அலகிலாப்பாச சாலமகற்று மெஞ்ஞான நூலோ
டுலவுதலொன்றி நாளு முபநயனந்தா னென்பர்
நிலவிடா திந்தியத்தி னீடறிவினை மறைத்தல்
பலர்புகழ் விரதர் தேசப்பான்மையாம் பகருங்காலே (கரு)

எங்கணுநிறைந்தான் றன்னோடிரண்டற விசைந்துநாளுந்
தங்கியவினைக்கீடாகச் சார்ந்திடுந் தநுவோடொன்றி
மங்கிடுமறுபிறப்பை மருவற விடுதருனே
யங்கணன் கோதானந்தானு மெனவறைந்தானன்றே. (கசு)

உலகுறு பொருள்களோடே யுற்றபேராசை நீத்த
விலகுநீராடலென்று ~~றையுவ~~ னூலியம்பாநிற்கு
மலகில் சிற்சத்தி யோடே யனுபவித்திடுதலென்று
நிலைபெறு விவாகமென்றே நிமலநூலனைத்துங் கூறும். (கஎ)

உலவிடுமனந்த சத்தியோடழுந்திடாது நிற்றல்
பலர்புகழ் வனத்திற்சேறல் பழுதறத்தமியனாகி
விலகிடுசீவற் பாவமெறிதத்துவ மாமீரெட்டும்
புலமுற நினைந்தபின்னர்ப் பூரணாகுதியுஞ் செய்தே. (கஅ)

அரியதோரிராகுநீங்க வழகுறுமதிபோலாங்கே
மருவியபுதல்வனாவி மகிழ்வுற வெடுத்துமெல்லப்
பொருவறுபிரம னாடிபுழை வழியேதுமீதே
குருவருண் மண்டலத்திற்கோக நகத்தில்வைத்தே. (ககூ)

திருவருள் ஞானானந்தச் செழுஞ்சுடரோ டொன்றாக்கி
மருவுறயோசித்தாங்கே மாசறுசிவன் போனாக்கி
யிருண்மலமகற்றுஞான விருந்தவர் தமக்குண்மேலாம்
குருபரன் மறித்து மோமந்துயிற்றி யாறத்துவாவும். (உ௰)

மனமுறநினைந்து நீக்கமறிந்து மந்திரம்பதங்க
ளினமுறு மக்கரங்களொழிறிகழ் புரங்கண்மிக்க
முனமுறுதத்துவங்கண் மொழிதருகலைகளெல்லா
முனியகத்தோமம்பண்ணியொடுங்குமாறினை நினைந்தே.(உக)

காரணுதிபரின் மேலாங்கழிபெருஞ் சிவபாவத்தாற்
பூரணுகுதியும் பண்ணிப் பொருவருவிழிகளாலே
பாரணுதீதமான பரானந்த ரூபமாகுந்
தாரணுசத்தியாகச் சார்ந்தவன் றனுவைப்பார்த்தே. (உஉ)

முழுதுணர்ந்தெவர்க்கும் போக முத்தியை வழங்குமெங்கோன்
செழுமலர்ப் பொதட்டு மீதே சேர்குருமண்டலத்துப்
பழுதற யோசித்தாங்கே பயில்புதல்வன் றனுவி
வழுவறு மவன்காயத்தின் மன்னிடவமைத்துவைத்தே.(உ௩)

ஒடுங்குமா றடங்கியுள்ளே யோங்குமா றத்துவாவும்
படங்கொள் பாம்பசைத்தான் றன்னிற் பழுதறவமைத்துஞான
மடங்க லாலவனைப் பின்னும் வாச்சிய வாசகமிறந்தே
யடங்கிடாமன வாக்குக்கட்கோசரமாகியன்றே. (உச)

அறிவுறு பிரமா ணங்கட் கதீதமா யொப்பொன்றின்றிப்
பொறிகரணங்கட்கெல்லாம் புலப்படா விலக்கணங்கள்
செறிவுறு தாகியர்ந்திறந்து கேவலமாயுள்ளே
பிறிதரா வறிவானந்தப் பெற்றியா மெவைக்குமேலாய். (உரு)

துகளறு மவுன மாகித்து விதமத் துவிதமின்றி
யகளமாயகண்ட மாகு மறிவினைத் தியானம் பண்ணிச்
சகளமாம் புதல்வன்றன்னைத் தடக்கையாலணைத் தவன்றன்
றிகழ்தரு சென்னிமீதே சிவவடிவினை நினைந்தே. (உசு)

அவன்றனை யெதிர்நோக்காக வழகுற முன்னிறுத்திச்
சிவன்றன துருவமாயுஞ் சிவசத்தி வடிவமாயு
நவந்தரு கமலத்தோங்கு நாண்மலர்ப் பதங்கள் சூட்டப்
பவந்தவிர்முதல்வன்றனும்பங்கயச் செங்கைகொண்டே. (உஎ)

முடிமுதற் றானமெல்லா முறைமுறை யமைத்துமுன்னின்
றடியனே னுவியாக்கை யரும்பொருளனைத்தும் யான்செய்
கொடுவினை யகலுமாறு கொண்டருளெனப் பணிந்து
கடிகமழ் புனலினோடு காஞ்ச னமணிகலந்தே. (உஅ)

மனமொழி மெய்களாலு மகிழ்வுறக் கொடுக்கவாசா
னினமலி பொருளனைத்து மெனமெதன வாங்கலாலே
தனதுறு வசமொன் றின்றிச் சார்ந்துமெய்ப் புளகம்போர்ப்ப
முனமதுபரமானந்த முகிழ்த்திட வணங்கி நின்றே (உகூ)

ஆடுவன் கரங்கள்கொட்டி யழுதுறு மெய்வியர்ப்பப்
பாடுவனுதகீதம் பலபல விதங்களாக
வோடுவன் சிரிப்பன் பாசவுணர்வினை யிழந்து தன்னைத்
தேடுவன் றிகைப்பனுசான் றிருவருளேக்கஞ் செய்தே. (௩0)

மாறில்சீர்ப் புதல்வன்றன்னை வரவழைத் திருத்திக்கோமா
னுறுமீரேழு முன்னின் றரிக்கு மேமேழி லாக்கி
வீறுசேர் சிவனவன்றன் விமலயோடொன்று மூலங்
கூறுசெய் தருக்கனுகக் குறையற வுபதேசித்தே. (௩க)

திருமலிபுதல்வனுக்குத் தீதறத் தான்முன் சூடு
மருள்வளர் தொடையல்சூட்டி மௌலியிற்புழற்காற் செய்ய
விருசரோருகங்களென்ன வெறிசுடர்க் கடகமாழி
மருவிய கரங்களாலே மகிழ்வுற வபிடேகித்தே. (௩உ)

ஓங்குமுப் பொருளினுண்மை யுரைத்து முன்னதனைநன்று
யாங்கவன் றெளியு மாற்று லையிரு பகுதியாகத்
தேங்கம ழிதழித் தாரான் செப்பு காரியத்தைத்தானும்
பாங்கினு லருளிச்செய்யப் பழுதற வவனுங்கேட்டே. (௩௩)

திருவளர் பாதபூசைசெய்து முன்பணிந் தெழுந்தே
யருவமா யுருவமாகி யருவுரு வாகியன்றாய்
நிருமல வடிவிருக்க நீசனேன் றன்னையாளக்
குருவருள் வடிவங்கொண்ட குழகனே போற்றிபோற்றி (௩௪)

ஐயனேபோற்றி யாண்டவமலனே போற்றிஞான
மெய்யனே போற்றிதீய வினைவழி யுழலாவண்ணம்
பொய்யனேன் றன்னையாளும் புண்ணியப் பொருளேபோற்றி
சைவனேபோற்றி யெங்கடலைவனே போற்றிபோற்றி. (நரு)

சம்புவே போற்றியார்க்குந் தாணுவே போற்றிமேலை
யும்பராலறிய வொண்ணு வொருவனீ குரவனுகி
யிம்பரில்வந்து தீயேனி ருண்மல வலிதொலைக்கு
நம்பனே போற்றி யெங்கணுயகா போற்றிபோற்றி. (நசு)

தந்தையாயெனை முனீன்றதாயு மாயளித்தாய் வாழி
சிந்தையே வாழிநாயேன் றினைத்திடும் பொருளேவாழி
யந்தமோடாதியில்லா வமலனே வாழிமுன்னைப்
பந்தமா மலநோய் தீர்க்கும் பரமனே வாழியென்றே. (நஎ)

துதித்துநீடண்டு போலத் துயர்செட நாஞென்றின்றி
விதிப்படிப் பணிந்தமுத்த மெய்த்தவர் தம்மையெல்லா
மதிப்புடன் வணங்கியன்னுர் மகிழ்வுறக் காசுந்தூசு
ந்திக்குவைதானுந்தானு நேசமோ டளித்தபின்னை. (நஅ)

அணிசெய்தோர் மண்டபத்தை யழகுசேர் கம்பலத்தான்
மணியணிமாலை யானும் வண்டொடு சுரும்பரற்றப்
பிணிமுறுக்கவிழ்ந்துசொர்தேன்பிலிற்று பூந்தொடையலானு
ந்னுகியே குரவன்றன்னை நவையறு தவத்தோரோடும். (நகூ)

இங்கெழுந்தருள வேண்டுமென்று முன்பணிந் தெழுந்தே
யங்கவர்பாத மெல்லாமழகுற புனல்களாட்டிப்
பங்கமிலாசனத்திற் பரிவுற விருத்தி நல்ல
கொங்கவிழ்மலர்கள்செங்கைகொண்டருச்சனைபுரிந்தே. (சய)

பரிகலந்திருத்தி யான்பாற் பதமுத லளித்தன்னுரை
யுரிமையாலமுது செய்வித்துறும் பெருஞ்சடமாந்திய
விருண்மல வலிசு டேர விம்மையே சீவன்முத்தி
மருவினன் ஞானதீக்கை வாழ்விது வெனவளித்தான். (சக)

ஞானதீக்கை முற்றும்.

ஆகத் திருவிருத்தம். ௱௪

தத்துவரூபம்.

என்றினியதேசிகனியம்பவதுகேளா
நின்றபுதல்வன்றொழுதுநீடருளினாலே
யன்றுதசகாரியமளித்தமுறைநாயேற்
கின்றருள்செய்யென்றிடலுமேந்தலருள்செய்வான். (க)

தத்துவரூபம்காட்சிதற்சுத்தியான்மரூபஞ்
சித்துயிர்க்காட்சிசுத்திசிவரூபஞ்தரிசனத்தோ
டொத்துறையோகபோகமொன்பதோடொன்றுமன்னோ
பத்தெனுங்காரியத்தினுத்தேசம்பகருங்காலே. (உ)

வேறு.

ஆகிலிப்படியையிருகாரியம்
வாகைசூடியதாபதமன்னவா
யோகையோடெற்குணர்த்துதியென்றலு
மேகன்ஞானவியல்பையியம்புவான். (ங)

சிவசமவேதையாகிச்சித்தாகியமலையாகு
முவமையில்சத்தியொன்றின்ஞானமாமுரைக்கின் முன்னாட்
பவமுறுகாலந்தன்னிற்பருவஞ்சேருயிர்கட்கீச
னவமறவுரைத்தநாலேழாகமத்தமர்வதாகும். (ச)

சுத்தமாம்விந்துமாயையிடத்தெழுந்தூலசூக்க
தத்துவமனைத்துநான்காந்தனுகரணாதியாக
வுத்தமகுணத்தோயுன்னோடொன்றியேநின்றவென்றும்
புத்திசெய்மூன்றதாகப்புகன்றிடினுருவமீதாம். (ரு)

மேதினியாதியாகமேயதத்துவங்களெல்லாஞ்
சோதியாய்ப்புவனநாதர்சூழ்ந்தினிதிருக்கவெங்கு
மாதிநாயகனாயாவுமகத்தினுஞ்சித்தாய்க்காண்ட
றீதிலாத்தத்துவத்தின்றரிசனஞ்செப்புங்காலே. (சு)

பூதமுன்சிவமீறாகப்பொருந்துதத்துவங்கடம்மை
யாமுறையொன்றையொன்றிலடக்கியேவைத்தெலாமு

நாமலவென்றுளெண்ணிநகுதல்செய்திடுதலன்றே
யாமென்பர்தத்வசுத்தியாகமமுணர்ந்தமேலோர் (எ)

அறிவதாய்வன்னமின்றியருவமாயகிலமெங்குஞ்
செறிவதாயெனதென்றேதுஞ்சிறப்புடைத்தாகிமேலாய்ப்
பிறிவதாய்ப்பின்னுபின்னப்பிணித்தமும்மலத்தினாலு
முறுவதாமான்மரூபமுத்தமகுணத்தின்மிக்கோய். (அ)

அணுவினையடைந்தேயன்றுமகன்றிடாஞானச்செய்தி
நுணியபேரு வந்தன்னைநோக்காதுநோக்கிப்பொல்லாத்
திணியபேருருவிற்றோன்றுஞ்சிற்றறிவல்லயானென் (௯)
றெணுவதேயணுவின்காட்சியென்றனனெவர்க்குமேலோன்.

அந்தவாகாயந்தன்னையடைந்திடுவதனுக்கேற்ற
சிந்தனையெல்லாமீசன்செயலெனத்தெளிந்துசேர்ந்த
பந்தம்யானல்லனெல்லாம்பரவசமென்றுபார்க்குஞ்
சுந்தரவறிவேயான்மசுத்தியாஞ்சொல்லுங்காலே. (௰)

அருவுருவிரண்டுமின்றியதீதமாய்த்துரியத்தப்பாற்
பரசிவமாகியெல்லாத்தத்துவப்பான்மையீந்து
பெரியதோர்தாணுவாகிப்பேசுதத்துவங்கடந்த
திருவருளுருவநாளுஞ்சிவரூபமாகுமென்பர். (௰௧)

அண்டத்துக்கண்டமாகியணுவினுக்கணுவுமாகிக்
கொண்டுதானணுக்களுள்ளங்குகையெனத்தோற்றநாசம்
விண்டுபேருபாதிநீங்கிவிமலமாமுயிருட்டோன்றுந்
தெண்டிரையமுதமென்னச்சிவதரிசனமீதாமே. (௰௨)

தன்னுயிர்சிவத்தோடொன்றத்தகவிலாமலங்கணீக்கி
யன்னதுநானேயாமென்றன்னியமிலாமைநோக்கிப்
பின்னமாமவனிவியானிப்பிறப்பிறப்புறுதலாலே
யென்னுமாதரவைவீட்டல்சிவயோகமென்பர்மேலோர். (௰௩)

உண்மையாஞ்ஞானந்தவொளியினுளடங்கித்தூய
திண்மையாங்குணங்களெட்டுஞ்சேர்ந்தனுபவித்துநீங்கா

வண்மையாலதிசயங்கண்மாய்ந்தூ தானுகிநின்ற
நுண்மையேசிவபோகந்தானுமென்று நுவலுநூலே. (௰௪)

இதுதசகாரியத்தினிலக்கணம்பரிக்கைமுற்று
மதிசெய்தாருரைக்கவல்லாராயினும்வடநூல்வல்ல
வதிதவாலறிஞர்கூறவையமுந்திரிவுமின்றி
விதிமுறையுணர்ந்தவாறுவிளம்புவங்கேட்டிமேலோய். (௰௫)

யாதுபாதானத்தென்றுமிறைவன்றனிலையமாதி
பேதமூன்றுண்டாயாரும்பேசுதற்குரியனுன்
யாதுமாமாயைமாயைகுண்டலியமலைவிந்துத்
தீதில்வாகீசிவித்தைசிவமிவைபரியாயப்பேர் (௰௬)

ஆதியாங்காலந்தன்னிலனந்தகாரியமுள்ளாக்கித்
தீதிலாக்குடிலைநாப்பண்சிறந்ததோர்ஞானந்தோன்றுஞ்
சோதியாய்ரூபமாகியுலகெலாஞ்சூழ்ந்துமேலாய்ப்
பேதியாவதற்குநாமம்நாதமாம்பேசுங்காலே. (௧௭)

சாதகற்கிலக்குமாகித்தயங்குநற்படிகமென்னச்
சோதியாயுவமமின்றாய்த்தோற்றுதத்துவங்கட்கெல்லா
மாதியாய்ஞேயமின்றியனுமயமாகியொன்றாய்க்
கோதிலோங்காரமாகியுயிர்தொறுங்கூடிநின்றே. (௧௮)

குறைவறவறிவையார்க்குங்கொடுத்தரற்குருவமாகிச்
செறியுமூவுலகமெல்லாஞ்சிவமெனத்தெருண்டுபோற்றப்
பிறிவுறுவாக்குநான்காய்ப்பிறப்பதற்கிடமாய்வீயா
நெறியுண்டத்தாகுமீது சிவமெனநிசழ்த்துநூலே. (௧௯)

கிரியையாம்விந்துமுன்சொற்கேடிறத்துவத்திற்றோன்றி
யரியசீரமலன்சத்திக்கமர்விடமாகியெல்லாம்
பரிவுறவளிக்கவந்தபான்மையாற்பதமுமாகி
யுரியவைங்கலையுமாகுஞ்சத்திதத்துவமென்றேரே. (௨௰)

ஞானமுங்கிரியைதானுநணுகியொத்தவர்க்குப்போக
மானதோரூபாரூபமாகியங்குரமாய்த்தோன்று

மீனமில்சத்தியின்பாலிழுது விற்கிடம்போல
வானநாயகனூர்மன்னுஞ்சதாசிவமதிக்குங்காலே. (௨௧)

ஏறியேகிரியைஞானமிழிந்ததீச்சுரந்தான்முன்னே
கூறியசதாசிவத்திற்குறைவறவுதிக்கும்வித்தை
மாறிலீச்சுரத்திற்றோன்றும்பங்கியேகிரியைஞானம்
வீறிடவமலன்றானேவிளைத்திடுமிவைகளெல்லாம். (௨௨)

சுத்தமாம்விந்துவின்கட்டோன்றுதத்துவங்களைந்து
நித்தமென்றுரைப்பர்சூக்கநீங்கிடாநீர்மையாலே
யத்தகுதூலந்தானுமடங்கிடாதாகித்தோற்ற
மித்தையாமாயாவாதவெறியருக்காகுமீதே. (௨௩)

நித்தமாயொன்றாயெங்குநிறைந்தருவாகிவீடாச்
சத்துமாய்வினைகளெல்லாஞ்சார்ந்திடுந்தானமாகிச்
சுத்தமின்றாகிக்கன்மத்துடக்குறுமுயிர்கட்கெல்லாம்
பெத்தமாய்நீங்காதோங்கும்மாயையின்பெற்றிதானே. (௨௪)

இருவிதமாகுமாயையேயதத்துவங்களெல்லா
மொருவகைசூக்கந்தூலமொருவகையாகுஞானக்
கிரியைகள்விளக்கிச்சூக்கந்தத்துவக்கிழமையாலே
மருவியான்மாவைநீங்காதமர்ந்திடுமெதிக்குங்காலே. (௨௫)

உற்றிடும்புவனத்தோடுமுளதனுவாதியோடு
மற்றையதூலந்தானுமாய்ந்திடாதுறையுமீது
கற்றவரறிவர்யாருங்காண்பரேற்காலமாகித்
தெற்றெனவுருவமாகிப்புவனமாய்ச்செறியாமுன்னர். (௨௬)

படிமுதலானவெல்லாம்பயிலுமேலிவற்றைநாளு
முடிவுசெய்தாக்கிக்காக்குமுதல்வருண்டென்பதென்னை [லாம்
நொடியிலார்முயற்கோடொக்கும்நோன்மையினென்னினெல்
வடிவுறுஞ்சத்தியாகிவருவதுவியத்தியாமே. (௨௭)

ஆதலான்மாயைதன்னைக்கலக்கிடவநந்தருள்ளக்
கோதிறத்துவங்களுண்டாம்விகிர்தியின்கூட்டந்தன்னை

யோதுவாமாயையாகத்தத்துவத்தோடொன்றாக்கித்
தீதிலாமாயாரூபமீதெனச்செப்புநூலே. (௨௮)

மாயையிற்காலந்தோன்றுந்துடிமுதன்மருவிநுட்ப
மாயதோர்காலமூன்றாயுலகெலாமாக்கிப்போக்கி
யேயவேமலபாகந்தானியற்றிடுமனந்ததேவ
நாயனாரருளினாலேயுயிரெலாமுத்திநண்ணே. (௨௯)

பின்னதினியதிதோன்றிப்பெருகியநியமரூபந்
தன்னியல்பாகியெல்லாவினைகளுஞ்சாரச்செங்கோன்
மன்னவனாணையென்னவரன்முறைநடாத்துமென்று
மன்னதாலணுக்களியாவுமருந்திடும்போகமார்ந்தே. (௩௰)

அந்தமோகினியிற்றோன்றியருங்கலைசிறிதவித்தை
சிந்தியேஞானம்வைத்துத்தெரிவிக்குங்கிரியாசத்தி
நந்திடாதோரிடத்தேதநஹுகிடும்வினைக்கீடாக
முந்தியபந்தமென்றுமொழிந்திடும்புருடர்க்கெல்லாம். (௩௧)

வித்தையக்கலையிற்றோன்றியறிவினைவிளக்கவுன்னும்
புத்தியிற்போகமெல்லாம்பொருந்தியேயுயிர்களென்று
முத்தமகரணமாகவுரைக்கலாமதனாற்புத்திக்
கொத்துறுசத்தமாதிவிடயமுங்கொள்ளுந்தானே. (௩௨)

வித்தையோடிராகந்தோன்றிமேவியேயிச்சாரூபம்
புத்தியின்விசிட்டத்தாலும்புற்கலர்க்குபகரிக்குந்
தத்துவமைந்தினுள்ளேசார்ந்திடுஞ்சகலர்க்கஞ்ஞான்
றொத்துறும்புருடனாயதத்துவமுதிக்குமன்றே. (௩௩)

ஆயதத்துவத்தினாலேயடைந்துபோத்திருத்துவத்தை
மாயையான்மயங்கிப்புந்திமருவியபோகமெல்லாம்
நாயகனருளினாலேநயந்திடுமுயிர்களென்று
மேயதத்துவங்களேழுமீச்சுரமென்பர்மேலோர் (௩௪)

கூறியகலையின்மானுங்குணம்விளங்காமைதோன்று
மேறுதல்குறைதலின்றியிதனின்முக்குணங்களாகு

மாறில்சீகண்டராலேசத்துவமலங்கணீக்கி
யீறிலாச்சுகமாய்முத்தியெய்து தற்கேதுவாமே. (௩௫)

துய்யசீரிராசதந் தான் றுக்கமாய்ச்சுவர்க்கத்துய்க்கு
மையுறுமோகமாகித்தாமதநரகத்தாழ்க்கு
மெய்திமுக்குணங்களெல்லாமுயிர்தொறும்புந்தியாதி
மெய்யுறு தத்துவத்திற்பின்னமாய்விசேடித்தோங்கும். (௩௬)

புந்திமுக்குணத்திற்றோன்றிப்பொருந்தியவினைக்கீடாக
வந்திமேலோடுகீழுமுறும்பெரும்போகமெல்லாந்
தந்துநிச்சயித்துநிற்குந்தருமமுன்னாயவெட்டும்
வந்திடும்விருத்தியாகுமதியினுக்கெண்ணுங்காலே. (௩௭)

தருமமுன்னாயநான்குஞ்சத்துவமிராசதந்தா
னுரியசீரிராகமாகுமொழிந்தவைமூன்றுமுன்னே
மருவியதாமதத்தின்குணமெனமதிப்பர்புந்தி
குருவளர்சத்துவத்தின்குணமிகவிரண்டுங்குன்றும். (௩௮)

யானெனுமகந்தையென்றுமிருக்குமாங்காரந்தானு
மூனமில்புந்தியுள்ளேயுதித்திடுமதுவுமூன்று
மானதைசதவைகாரியணிகொள்பூதாதியென்றே
ஞானலாதெனையொப்பார்கணாட்டினிலொருவருண்டோ. (௩௯)

என்றபேரகந்தைக்குள்ளேயயதைசதத்திற்றோன்றி
நின்றிடுமனங்கணைக்கிநிகழ்பெரும்விடயமெல்லாஞ்
சென்றணைவிக்கும்புந்திநிச்சயஞ்செய்யநாணு
மொன்றியகாக்கைக்கண்போலுள்ளினும்புறத்துஞ்சென்றே.

தோற்றும்பின்றைசதத்திற்சோத்திரமாதியைந்துஞ்
சாற்றுவானுதியைந்திற்சத்தமுஞ்செவியிற்சாருங்
காற்றுமுன்னாயநான்கிற்கலந்திடும்பரிசந்தொக்கி
லேற்றமாம்விழிநாநாசிவிடயமுமிவைபோலெண்ணே. (௪௧)

வண்மைவைகாரியத்தின்வந்தகன்மேந்திரியங்கள்
பண்ணமர்வாக்குப்பாதபாணிபாயுரு வுபத்தந்

திண்மைகொடொழில்களுங்குஞ்செப்புவாம்வசநந்தானம்
வண்மைகொள்கமனத்தோடுவிசர்க்கமானந்தமென்றே. (௪௨)

ஓதுபூதாதிகத்தினுதிக்குமாத்திரைகளுந்தந்
தீதிலாச்சத்தமாதிசேர்ந்திடு கந்தந் தன்னிற்
கோதிலாவிரதமந்தங்கூடுமற்றதனைநீங்கா
தீதுபொன்மூன்றினையுங்குணங்களொன்றொன்றிழந்தே. ௪௩

பூதமாத்திரைகடம்மிற்பொருந்தியேயிருக்குமென்றுந்
திதிலாத்தானந்தானியாமிவைசெப்புங்காலை
யோகின்மாத்திரைகடம்போலுறுமதிலிலேபம்போலக்
கோதிலாப்பூதமைந்துங்கூடியும்வேறுமன்றே. (௪௪)

வானமுஞ்சத்தமாகுமாத்திரையதனிற்றோன்றித்
தானஞ்செய்திடமேவைக்குஞ்சார்விடமாகிவேறற்
றூனமிறீவிராதிசத்தமுமுதிப்பித்தோங்கு
மீனமில்வரவுபோக்குக்கிடமுமாமுயிர்கட்கெல்லாம் (௪௫)

பரிசமாத்திரையின் வாயுற்பவித்தெலாஞ் சலிக்கப்பண்ணி
விரிவுறுபொருளனைத்துந்திரட்டிமேலோச்சிச்சுற்றிப்
பரிவுறுபிராணனுதிபத்தெனப்பெயர் பரித்தே
யரியசிற்றுயிர்கட்கெல்லாமகம்புறமாகுமன்றே. (௪௬)

இலகனலுருவதன்மாத்திரையகத்துற்பவித்துப்
பலபொருளுயிர்கடெய்க்கப்பக்குவம்பண்ணியெல்லா
வுலகினுமூன்றுயோங்குந்தென்றிசையங்கியந்தம்
விலகியேசைவவிந்துவுதரவெவ்வழலுமாமே. (௪௭)

தோற்றிடுமிரததன்மாத்திரை யினிற்றோயம் பின்னைச்
சாற்றுசங்கிரகநாளுந்தொழில்சராசரங்கட்கெல்லாம்
போற்றியபோசமாக்கும்பொருந்திய தூளிதன்னை
மாற்றியேதிடமதாக்குமவனியைமன்னிநின்றே. (௪௮)

கந்தமாத்திரையிற்றோன்றிக்கடினமாய்த்தரிக்கும்பூமி
யந்தமாத்திரையினுள்ளகுணமைந்துமவனிக்காகும்

முந்தொன்றுகுன்றிநான்குமூன்றிரண்டொன்றுநீர்தீ
வந்தவானிடத்திற்றோன்றுங்குணங்களுமதிக்குங்காலே. (சக)

வளியுதியாதுவானின்வன்னியும்வளியிற்றோன்று
தளியுறுகமலந்தானுமனலிடைபெழாதுபூவுங்
களியுறுசலித்தெழாதுகாண்டலாற்குணங்களேறி
வெளியுமைங்குணத்துவத்தைமேவுமப்படியேதோன்றில். ருய

சாற்றிடுந்தனுவேயாகுந்தாரணியாதிபத்து
மூற்றமாங்கரணமாகுமொன்றேடீராறுமுன்னி
லேற்றமுக்குணங்களாமொன்றேமுமுட்கருவியாகுந்
தோற்றியவாக்குநான்குஞ்சுத்தமைந்தேவுஞ்சூழ்ந்தே. (ருக)

உற்றிடுந்தத்துவத்தினுருவமாந்தனுவமூன்றாய்ப்
பற்றிடுந்தூலஞ்சூக்கம்பரமெனப்பரமஞான
நற்றவதூலம்பூதநணுகியவடிவமாகு
மற்றதட்டகமதாகும்வயிந்தவம்பரமாமன்னே. (ருஉ)

தத்துவவுருவத்தோடேசார்ந்திடுமுயிர்கட்கெல்லாஞ்
சுத்தமாம்பரதேகத்திற்சொலித்திடும்வாக்குநான்கு
நித்தவிஞ்ஞானர்க்கன்றேநிகழ்ந்திடுந்தூலஞ்சூக்க
மொத்துறும்பரமுமாகியொளிதிகழ்வயிந்தவந்தான். (ருங)

தத்துவரூபந்தன்னைச்சற்குருவருளினாலே
புத்திசெய்பெரியோர்ஞான பூரணனருளினாலே
வைத்திடும்பதத்தின்மேலாய் மருவியபோகந்துய்த்து
நித்தியமுத்தசுத்த சித்தருநேர்வரன்றே. (ருச)

தத்துவரூபமுற்றும்

ஆகத் திருவிருத்தம் கருஉ.

தத்துவ தரிசனம்.

நாலுகோணம்பிறைமுக்கோணமறுகோணம்
நணுகியசீர்வடிவுநிறம்பொன்னுதியாகும்
மேலுமதிபதிகண்மலரயனுதியைவ
ரியம்பியிடுஞ்சத்திகளுூம்வாணிமுதலோர்கள்
கோலமாங்கலைதானுநிவிர்த்திமுதலாகுங்
கூறநிலநீர்வன்னிவளியண்டங்கட்குச்
சீலமுறுமிருதயமுங்கந்தரமுநாவுஞ்
சிறந்தபிருகுடிநடுவுஞ்சென்னியுமாமிடமே. (௧)

எலும்புதசைநரம்புதோல்மயிரைந்தா வனி
யியம்பின்றலமலநீர்சுக்கிலமிரத்தமச்சை
குலங்கெடுக்கும்பசியாசையுறக்கமடிவாட்டங்
குலவுமனல்வாயுவிலங்கனஞ்சயனம்கூட
லலங்கறவேயோடிடுதல் விழுந்திடுதல்வான
மாராகம்வெறுப்பிலச்சையைய்யநோயெனவைந்தாகு
மிலங்கியிடுமையைந்தும்பூதத்தின்பிரிவாயிருந்
துடலைப்புறம்பேயுமியற்றுமெனவறியே. (௨)

கந்தமுதன்மாத்திரைக்கும்பொன்னுதியுருவங்
கருதிலுபத்தாதிக்குமிவ்வண்ணங்கழறு
முந்தியமூக்காதிக்குமிவ்வுருவேமொழிவா
முன்னியிடுமனம்புத்தியாங்காரஞ்சித்த
முந்தியிடும்புருடனெனவுரைபெறுமைந்திற்கு
மொளிகொணிறம்வெண்மைசிவப்புக்கருமைவெண்மை
சந்தித்தகறுப்புவெண்மையகராதிவடிவாஞ்
சாற்றுமலரயன்முதலோர்சாருமதிபதிகள். (௩)

நந்தலிலாப்பிரகிருதிசங்கநிறந்திமிர
நணுகியிடுமராகம்வித்தைபுகையாகுநாடிற்
குந்தநிறங்கலைநியதிபொன்னிறமாங்கூறிற்
கூடியிருஞ்சிருட்டிமுதன்மூன்றுருவாங்கால

மந்தியமாமாயைதானத்திமிராகார
மாடகமாஞ்சுத்தவித்தைதிமிரமீச்சுரமாஞ்
சுந்தரநற்படிகநிறஞ்சதாசிவமாம் விந்துந்
துவாதவளநாதமெனச்சொல்லிடுமாகமமே. (ச)

வேறு.

எண்ணியமுப்பத்தாறுமியைந்திடுங்கன்மத்தோடே
நண்ணியவனுக்கட்கெல்லாநாயகனருளினாலே
திண்ணியமனத்தாலுள்ளேதரிசனஞ்செய்புறத்துங்
கண்ணியபூமியாதிகாணுமாறுரைப்பக்கேணீ. (ரு)

தத்துவவத்துவாவைச்சங்கிரகித்துக்கூற
வுத்தமகுணத்தோய்கேட்டியொராயிரகோடியண்ட
மித்தலத்துளவாநீர்க்குமிம்முறையனலாதிக்கும் [லாம்.
புத்திசெய்யொன்றையொன்றுபொருந்திடுமிவைபோலெல் சுூ

ஒண்டிறற்கடாகங்கோடிபோசனையனலமூர்த்தி
கொண்டபேர்நிலையங்கோடிகுருச்சுடரீரைங்கோடி
மண்டியபுகையைங்கோடிவலியுறுமநேககோடி
திண்டிறல்வீரர்சூழக்காலவங்கிசர்சேர்வர். (எ)

ஓங்கியநாகமீதேயுற்றிடுநூற்றுநாற்ப
தாங்கதற்கதிகமெண்ணான்கவற்றுளுமநிகமூன்று
மேங்குறும்வீசியோடேரௌரவங்கும்பிபாக
மூங்கினுங்கிழுநள்ளுமுறைந்திடுமுணருங்காலே. (அ)

இந்தமாநரகமூன்றுமெவ்வெட்டாமொன்றின்முப்பான்
றந்திடுநன்னான்காகத்தட்டெண்ணான்கினுக்குமான
மந்தரத்தோடுங்கோடியாயிடுமொவ்வொன்றப்பாற்
சுந்தரக்கூர்மாண்டந்தான்றெண்ணூற்றென்பானிலக்கம். (கூ)

அதன்மிசையுரகர்வாழுமசுரராக்கதர்களோடு
மிதமுறுபாதலந்தானேழென்பவிவற்றின்மீதே

பதமுறுமாடகர்க்குப்பார்த்திடிறெவ்வொன்றென்பான்
தசமந்தராளஞ்சாற்றிடினூற்றுப்பத்தாம். (௰)

இருபதுநூற்றுப்பத்துயோசனைபூமியாக
வொருபதிற்றைந்துகோடியுற்றிடுமுலகத்தின்கண்
ணரியதோர்மேருநாப்பணமர்ந்துவாராழிசூழ்ந்து
யரிவுறுதலந்தான்சங்குத்தீவெனப்படுவதாமே. (௰௧)

இலக்கமொன்றிரண்டுநான்காமிம்முறையேழுதீவுங்
கலக்குறுகடல்களேழுங்கனகமால்வரைகள்ளாதி
தலத்தினின்மேவுநன்னீர்சாகரத்தளவீர்கோடி
யிலக்கமைம்பத்துமூன்றோடேயுமாயிரவைம்பானும். (௰௨)

ஆடகவுலகம்பத்துக்கோடியாமதனுக்கப்பாற்
பாடுறுவலயமானபருப்பதவகலந்தன்னை
நாடுவரயுதமாகஞாயிறுமுதலாயுள்ளோர்
பீடுறுமொளியதற்குட்பிறந்திடும்பேசுங்காலே. (௧௩)

ஐயெழுகோடியேநூறாயிரப்பத்தொன்பானே
டெய்திடுமெண்ணைந்தாயமூவாயிரவிருளுலோக
மொய்கடல்கோடியோரீடேழுவென்பானிலக்கங்கோடி
மையறுகடாகமாகவாய்த்திடுமைம்பான்கோடி. (௧௪)

இருநிலநான்குதிக்குமிவ்வளவாகுமீதே
வருமெழுபுரவித்தேர்மேன்மருவியவிரவிலோகங்
கருதிலோரிலக்கமாகுங்கலைமதியுலகுமற்றே
திருமலியுடுக்களெல்லாஞ்சேருமண்டல மிலக்கம். (௧௫)

மதிமகன்புகரேசெவ்வாய்வானவர்குரவன்மந்தன்
பதிகளிவ்விரண்டிலக்கம்பழவினைக்குறும்பெறிந்த
வதிகவாலறிஞர்க்கானவாரிடவுலகிலக்கம்
வதியுமோரிலக்கத்தப்பான்மற்றையதுருவன்றானம். (௧௬)

திருவாருமகலோகம்பின்சனதவலோகங்கட்கே
யிருகோடியெண்பதோடைந்திலக்கமெண்கோடியீரா

றுருவாயசத்தியலோகமோங்குமேலதிகமாக
மருவாருங்கமலத்தோர்க்குவாய்த்தவெண்ணிரண்டுகோடி. கஎ

விண்டுவின்பதந்தான்கோடிமேவிடுமொன்பான்கோடி
யண்டநாயகனூர்வாழுமாலயங்கடாகங்கோடி
கண்டிடிலைம்பான்கோடிக்காசினிமுதலவாக
வுண்டொருநூறுகோடியோசனை பிரமாண்டந்தான். (கஅ)

கொடுந்திறற்கொடிற்றுக்கூர்வாய்க்குக்கிடத்தண்டமென்ன
விடுஞ்சுடர்க்கனகமேனிமேதினியண்டஞ்சூழ
வடுந்திறலிந்திராதியையிருதிசையும்வாழ்வர்
கடுங்கொலைக்கபாலிசாதிநூற்றுவர்காவல்பூண்டே. (கக)

திசையினுக்கதிபரானோர்திறலினையடக்கியன்னோர்
வசையறுபடைகடாங்கிமாதிரக்காவல்பூண்டு
தசையுறுகபாலமாலைசரித்தரன்சத்திதம்பா
லிசையுறப்பிரமாண்டத்தையெழிலொடுந்தரித்துவாழ்வர். (உ௰)

சாற்றியபிரமாண்டத்திற்றசகுணமாவரிக்குந்
தோற்றுபேரரவத்தோடுசுழிதிரைசூழ்ந்தநீத்தம்
போற்றியவமிர்தமேனிப்புண்ணியவருணமூர்த்தி
மாற்றருந்திறலினோடுமன்னுவரதன்மேன்மாதோ. (உக)

ஒளிகொணற்படிகமென்னவோங்கியவமரேசாதி
தெளிவுறுநாலிரண்டுஞ்செறிந்திடுமிந்திராதி
களியுறுதிசைகளெட்டுங்கவின்பெறுமதற்குநாம
மளிபெறுமாதிருய்யவட்டகமென்பர்மேலோர். (உஉ)

துதியுறுபுனற்குமேலாய்ச்சூழ்ந்தினிதிருக்கும்வன்னி
பதின்மடங்கதன்மேற்செய்யபாவகமூர்த்திவாழு
மதிருய்யவட்டகப்பேராமரிச்சந்திராதிக்
கதிதருபயிரவாந்தங்கவினோடெண்டிசையுஞ்சூழ. (உ௩)

தேயுவாவானத்தும்பர்தெசகுணமாகமேவும்
வாயுவாவரணநீலமணிநிறமதனில்வாழ்வர்

நாயகவாயுதேவர்நற்றவகையையேயாதி
யாயுநற்றுய்யாற்றுய்யவட்டகஞ்சூழ்வரங்கே. (உச)

அதன்மிசைவியோமஞ்சானுமையிருகுணிதஞ்சூழு
பதியினுக்கமேயமாகிவத்திராபதமேயாதி
யதிகமாம்பவித்திரப்பேரட்டகஞ்சூழநாளும்
வதிவரவ்விட்டத்தின்மிக்கவானமேவடிவாமீசா (உரு)

ஐயிருகுணிதம்விண்ணிலாங்காரமதன்மேலோங்கு
மெய்துமாத்திரைமனத்தோடிருவகையிந்தியங்க
ளையமில்சகலாண்டமுன்னயதாண்டகஞ்சூழ
மையுறுமகந்தைமேனிவானவரதன்மேன்மன்னும். (உசு)

சாற்றியவையெட்டாருந்தானமிப்புவியுஞ்சார்ந்து
நீற்றணிதிகழுமேனிநிமலனுக்கிடமாமாங்கே
தோற்றியவுயிர்கள்வாழ்வோர்துறந்தவருடலந்தன்னை
யாற்றியபாவமெல்லாமகன்றுபோயவற்றில்வாழ்வார். (உஎ)

உன்னியவாங்காரத்திலொருபதுகுணிதமாகு
மன்னியபுந்திகாலைவருகதிரொளிகடுப்ப
நன்னலம்புரக்கும்புந்திநாயகியதன்மேல்வாழுந்
துன்னியபைசாசாதிதுரிசகல்புவனஞ்சூழ. (உஅ)

புத்தியின்மேலெஞ்ஞான்றும்பொருந்துமுக்குணத்தைக்கற்
பத்தெனுங்குணிதமாகப்பகர்வரிந்திரநீலம்போல் [றோர்
உத்தமவரதனம்போலொளிவிடும்படிகம்போலா
மத்தகுபுவனமூன்றுமயனரியானும்வாழ்வர். (உகூ)

சாற்றியவெண்மூன்றாயதத்துவஞ்சகலர்க்கீயும்
மாற்றில்கொண்மூலந்தானுமையிருகுணிதமாகும்
வேற்றுமையின்றியுள்ளேவிளங்குமுக்குணத்தின்வெய்ய
கூற்றினையுதைத்தநோன்றாட்குழகன்வீற்றிருப்பன்மீதே. ௩௦

அதன்மிசைப்புருடனேடுமராகதத்துவந்தானேயுஞ்
சதமடங்கதிகமாகத்தருநிறங்குங்குமம்போ

லிதமுறுவிக்குமிச்சா ரூபமர்மிராகதேவர்
மதமுறவதிவர்மீதேமருவியவித்தைதன்பால். (௩௧)

தந்திடுமராகந்தன்னிற்சதகுணமதிகமாகு
மிந்திரகோபமென்னவெழில்பெறும்வாமையாதி
செந்துவர்க்கனிவாயொண்கட்டிருமலிமாதர்சூழப்
பைந்தொடிவித்தைமாதுபாகுறவதனிலோங்கும். (௩௨)

கலையதன்மீதுநூறுகுணிதமாம்கருமைசெம்மை
நிலைபெறுவெண்மைபொன்மைநிறநிமிர்புருவச்செவ்வாய்
வுலைவறுகலையென்றேதுமொண்டொடியதனில்வாழுந்
துலையறுமணிபொன்னாரம்துகிரோடைச்சாந்தம்வேய்ந்தே.

சார்ந்திடுநியதிதானுஞ்சதகுணங்கலையிற்கால
மோர்ந்திடினியதிமீதேயொருசதகுணிதமாகச்
சேர்ந்திடுமஞ்சனம்போற்றிகழ்த்திடுமதனில்வாழ்வ
ரீர்ந்திடுமுயிர்கள்வாளுளழிறிகழ்காலதேவர். (௩௪)

ஆயதோர்காலந்தன்னிற்சதகுணமதிகமாகு
மாயைதனிருளின்மாமைவருநிறமரிதாலம்பொ
ஞயனூரநந்ததேவர்நனந்தலையமர்வராங்கே
யேயுமிந்திரநீலம்போலெழில்பெறுமாயாதேவி. (௩௫)

கூறியமாயைமீதேயாயிரங்குணிதமாக
வேறிடுஞ்சுத்தவித்தையெழிறிகழ்சனகம்போலு
மூறிலாப்பதுமராகமொளிதிகழ்வித்தையாங்கே
மாறிலாதிருக்குமிக்கமந்திராதிபரும்வாழ்வர். (௩௬)

வித்தையிலீச்சுரந்தான்மேவுமாயிரமடங்காய்
சுத்தமாயொளிருஞ்செய்யசுடர்விழிகனல்கடுப்ப
வுத்தமகுணத்தரெண்மருறைகுவராங்கணுதி
சத்தனதாணையுப்க்குஞ்சத்திசங்கரத்திஞேடும். (௩௭)

கூறியவீச்சுரத்திற்குணிதமாயிரமென்றேது
மாறில்சாதாக்கியத்தின்மன்னிடும்படிகமென்ன

வீறுசேர்யோகபீடமேவிடுவிமலமான
வூறிலாத்தருமமாதியோங்கியகால்களாக. (௩௮)

ஐயிருநூறதானதளமுடையம்புயத்தான்
பொய்யறவதியுமீதேபுறவிதமெழுட்டும்போற்றி
மையறுவித்தையீசர்வதிவரிப்பீடமீதே
மெய்யுறுசித்தயோகர்விழைவொடுஞ்சூழ்வராங்கே. (௩௯)

அத்தகுபீடமீதேயம்புயப்பொகுட்டுநாப்பண்
டத்துவமெவையுமாக்குஞ்சதாசிவப்பிரமாங்கங்க
ளொத்துறவிபுவாயோங்கும்வியாபியாயுடனுநீங்காச்
சத்தியாமணுக்கடாமேதனுவெனத்தரித்துவாழ்வர். (௪௰)

சத்திசாதாக்கியத்திற்சாற்றிடிலக்கமாகி
யொத்துறுமெவைக்குமேலாயோங்கொளியாகுமாங்கே
சுத்தநற்படிகமென்னச்சோதியாய்மருவவிந்தங்
கொத்துறுகடம்பிற்றோன்றுங்கொள்கையவடிவமென்ன. (௪௧)

ஓங்கியசகளத்தோடேநிட்களமுபயஞ்சூக்கம்
நீங்கியகலையதென்றுநிமலவானந்தமான
தீங்கறுஞானமேனிச்சிவனுமைந்தாவன்றேறிற்
பாங்குறுசத்திபேதம்பகரமாதவத்தோய்கேட்டி. (௪௨)

சகளமாம்சாந்திபாதிதகலையோடுஞ்சாரிற்சத்தி
யகளமாம்விந்துத்தானேயகிலமும்வியாபித்தோங்கி
லுகளமாஞ்சூக்கமொன்றிற்சுவாலினியாதியோடுந்
துகளறவெண்ணிரண்டாஞ்சுரங்களேற்பின்னவிந்து. (௪௩)

மன்னியவிதற்குமீதேமருவியாலம்பமின்றி
யன்னியமிலாமையெங்குமசலமாயகண்டமாகித்
தன்னிலைபகன்றுமேலாய்த்தாரகமாகியார்க்கு
முன்னியதோற்றநாசமொழிந்திடுஞ்சிவமென்றுன்னே. (௪௪)

கூறியவாறாறுக்குத்தத்துவக்குழாமைந்தேழோ
டாறுநான்காண்மவித்தைசிவமெனவறைவரைந்து

3

மீறிலாவுயிர்கட்கெல்லாவாக்கையுமியற்றலாலே
மாறில்சீர்பிரேரகாண்டமாமெனமதிப்பர்மன்னே. (௪௫)

அநித்தமாய்ச்சுத்தமாகியசுகமாயான்மாவன்றிச்
செநித்திடும்பொருள்களெல்லாம்திரியவேமறைகளாகி
துளிர்த்துமுன்வினைப்பயன்கணுகர்விக்குமாதலாலே
முநித்தவவெழும்போகசயித்திரமென்றன்னே. (௪௬)

மானிடத்தேயுமூன்றுகுணங்களினுருவமாகி
யூனமில்புந்தியாதிகரணமாயுடம்புமாகி
மானமில்போகமுண்ணுமாதலான்மாயாபந்த
மானவாருயிர்கட்கெல்லாம்போக்கியமறுநான்காமே. (௪௭)

சொற்றருந்தத்துவங்கள்சூழ்ந்துறுமொன்றையொன்று
மற்றவைகதலித்தண்டின்வடிவெனவதியுமாங்கே
யுற்றுணரேரண்டம்போலுரைத்திடுமண்டமெல்லாம்
பற்றியபுவனந்தானும்பயின்றிடுமிவைபோலெல்லாம். (௪௮)

தத்துவங்கலையிற்சாரும்புவனமுந்தத்துவத்தி
லொத்துறுபுவனத்தின்கணுறையுமக்கரங்கடம்மிற்
மொய்த்துறும்பதம்பதத்தின்மொழியுமந்திரங்கண்மேவு
பெத்தமாறத்துவாவும்பிறங்கியவுயிர்கட்கன்றே. (௪௯)

ஈங்கிவைதத்துவத்தின்றெரிசனமிவற்றையெல்லாந்
தீங்கறவுணர்ந்துநாளுஞ்சிந்தனைசெய்வோர்கேட்போர்
பாங்குறுவித்தையாதிபதத்தினில்வதிந்தேயாவு
நீங்கியபிரளயத்தினிமலனேரன்னவாழ்வார். (௫௰)

தத்துவதரிசன முற்றும்.

ஆகத் திருவிருத்தம். ௨௧௨.

தத்துவசுத்தி.

வேறு.

சிறப்புடையதத்துவத்தின்சுத்திதன்னைச்செப்புவங்கேள்சித்தாந்தச்செய்திநோக்கி, பிறப்பவற்றிலவற்றொடுக்கமியல்பேயாகும் பிரளயத்துமுளமவைகள்பின்னமாகி, யிறப்பகன்றமாயையிடத்தெல்லாமெய்தியிருந்துமவரவர்க்குள்ளதேயுமவரவர்க்கே, மறப்பறவேசிவனலேசுத்திசெய்யவல்லவர்கட்கில்லையிவைமதிக்குங்காலே. (க)

வேறு.

பூவறலனல்கால்வானம்பொலிகந்தமிரதரூபம்
பாவுறுபரிசஞ்சத்தமுபத்தமேபாயுப்பாத
மோவறுபாணிவாக்குமூக்கொடுநாக்குநோக்கு
நீவுறுதுவக்குக்கன்னநினைந்திடுமனமகந்தை. (உ)

புத்திமுக்குணம்பிரதானம்புருடனேயிராகம்வித்தை
யொத்துறுகலைமீதோங்குநியதியோர்காலமாயை
சுத்தமாம்வித்தைமாயேச்சுரஞ்சதாசிவமேசத்தி
நித்தமாஞ்சிவனொடுக்கநிகழ்ந்திடுமுறைமையீதால். (௩)

பூமுதல்கந்தமாதிமாத்திரைபுக்கொடுங்கு
மாமமாத்திரைகளைந்துங்கன்மவிந்தியங்களைந்து
நாமமார்மனத்தினேடுஞானவிந்தியமுநாடிற்
றூமதவிராசதம்பின்றைசதாங்காரஞ்சாரும். (௪)

புந்தியிலகந்தைபுந்திபொருந்துமுக்குணத்தைச்சித்தம்
வந்துறுமானின்மானுமராகமும்வித்தைதானும்
தந்திடுங்கலையைச்சாருங்கலையொடுநியதிகால
முந்தியபுருடனேடுமாயையிலொடுங்குமன்றே (௫)

வித்தையீச்சுரத்தைமேவுஞ்சதாசிவத்தடங்குமீசஞ்
சத்தியிற்சதாசிவந்தானொடுங்கிடுஞ்சத்திதானு

மொத்,து றுஞ்சிவத்திலெல்லாமொடுங்கிடும்விந்துவின்கண்
புத்திசெய்சிருட்டிதானுமீதுபோற்புகலுநூலே. (௬)

அடங்கிடுமறுநான்காயதத்துவமான் மாவுள்ளே
யடங்கிடும்வித்தைநாப்பண்ணராகமுன்னுயவாறு
மடங்கிடும்விந்துநாதத்தழகியவித்தையாதி
யடங்கிடும்விந்துநாதமகிலமுமாயைதன்னில். (எ)

மண்முதற்சிவமீருகமருவுதத்துவமனைத்து
முண்மைமாமாயைமாயையுள்ளுறைந்துதித்தொடுங்குந்
திண்மையங்குரங்கள்பாரீர்சேர்ந்தெழுந்ததனின்மீள
வண்மையிலொடுங்குமாபோன் மாபரன்கருணையாலே. (அ)

வேறு.

சிவமொடுநற்சத்திசதாசிவமீசம்வித்தை
செப்பரியமாயைகாலநியதிகலையுற்
பவமுறுசீர்வித்தையிராகம்புருடன்மூலம்
பயின்றுமுக்குணம்புந்தியாங்காரமனத்தோ
டவமுறுநற்செவிதுவக்குவிழிநாக்குமூக்கொ
டழகியவாக்குப்பாணிபாதபாயுபத்த
முவமையில்சத்தம்பரிசரூபரசங்கந்த
மோங்கியவான்வளிதீநீர்பாருதிக்குமுறையே. (௯)

வேறு.

சொற்றருந்தத்துவத்தின்சுத்தியையுணர்ந்ததூயோ
ருற்றுமேற்பரபோகந்தாமுண்டெலாமொடுங்குங்காலம்
பற்றுடல்கழியமேலாம்பரமனைப்போலானந்தம்
பெற்றவர்பெருமையெம்மாற்பேசலாந்தகைமைத்தாமோ. (௰)

தத்துவ சுத்தி முற்றும்

ஆகத்திருவிருத்தம் ௨௨௨.

—oo:※:oo—

ஆன்மரூபம்.

வேறு.

அறைகுவங்கேளணுருபமலினனாகி
யறிவுசிறிதுறமாயைக்கடங்கிவீயா
துறைதருநற்சேதனனாய் வியாபியாகி
யுடம்பாதியியற்றியிடக்கருத்தாவாகிக்
குறையறுநற்புற்கலன்பொருளினாலே
கொடுவினைபோய்ச்சிவமாவனடைவேமுன்னை
முறைநிகழ்பேர்பசுவான்மாப்புருடனாதி
மூவகையாமவத்தையினில்மொழியக்கேண்மோ. (க)

வேறு.

தோற்றியவுருவத்தோடேதொழிலறிவிச்சையின்றி
யேற்றமாமுதன்மையின்றியெங்குமாய்நித்தமாகி
மாற்றரும்போகமுன்னிமாயையின்வயிற்றுண்மன்னிச்
சாற்றியமலத்தினோடுஞ்சார்ந்திடுமுயிர்களெல்லாம். (உ)

அந்நிலையமர்ந்தவாவிக்கரனருள்கலைவந்தெய்தி
மன்னியதொழிலுண்டாக்குமருவியவித்தையியும்
தன்னியல்பாகுஞானஞ்சாற்றியவிடயத்திச்சை
யுன்னுவித்திடுமராகமுறுவிக்குங்குணங்கள்மூலம். (ங)

கழிபெரும்புந்தியாதிகரணத்தோடொன்றியான்மா
வழுவறநியதிதான்செய்வல்வினைநியமத்தோங்கப்
பொழிதினையளிக்கக்காலம்பூதவாக்கையினிற்போகங்
குழுவியகருவியாலேகொள்ளுமாறுரைப்பக்கேண்மோ. (ச)

பொறிவழிமனம்போந்துற்றபொருளினைப்புறத்துநோக்கி
யறிவுறுதையஞ்செய்யவகந்தைவந்தபிமானிக்க
நெறிதருபொருளைப்புந்திநிச்சயம்பண்ணுமானிற்
பிரிவுறுகுணங்களாலேபெறுஞ்சுகதுக்கமோகம். (ரு)

பொருந்திடும் புருடனுலேபோகவுன்முகனுயாங்கே
யிருந்திடவிராகமென்மேலிச்சித்தபொருளை வித்தை
தரும்பொழுதளிக்கக்காலந்தகைந்திடநியதிபோக
மருந்திடுங்கலையான் மாயையான் மயங்கியசீவான்மா. (௬)

காலமந்தரமதாகக்கருமங்கள்சமமாங்கால
மாலமுண்டவன்றன்சத்தியணைந்திடுமாதலாலே
சீலமுண்டாயஞானதேசிகன் தீக்ஷைசெய்ய
நீலமாமலமுநீங்கநிமலனேராகுமான்மா. (௭)

வேறு.

சொற்றருங்கேவலசகலசுத்தமூன்றிற்
றுடக்குறுமாருயிரென்றேமூன்றுபேத
முற்றிடும்விஞ்ஞானகலரிருவராவ
ரொருவர்துகடீர்ந்தவர்களொருவருள்ளார்
மற்றவருளிலர்களனந்தேசராதி
மந்திரர்களெழுகோடிமலங்கன்மங்க
ளுற்றபிரளயாகலரியுரைப்பக்கேணீ
யோங்கியதோர்மலபாசமுறுதலாலே. (௮)

சிலரையனந்தேசர்தனுவாதிகூட்டச்
சிவனவர்கட்குள்ளதொழின்ஞானமீயக்
குலவுபுவனுதிபராய்ப்பிரமாண்டத்துங்
குணத்தினுமேற்புருடனினுங்கலையின்மீது
நிலவுவர்கண் மற்றையவர்வினையிற்கேற்ப
நீடுபுரியட்டகத்தோடுழல்வரெல்லா
வுலகுதொறுமவணிமுதற்கலையீருக
வொன்றியதவ்வட்டகந்தானுரைக்குங்காலே. (௯)

சகலர்திரிமலத்துள்ளார்மலபாகத்தாற்
சங்கரன்றன் கருணையினுற்குரவனுகி

யகலமலந்தீக்கையினலாரூரூப
வத்துவாத்துடக்கறுக்கவவன்போலாவ
ரிகலவினைநரகமொடுசுவர்க்கமெல்லா
மெய்திடுவராமற்றவர்நற்றவத்தின்மேலோய்
புகலுமனுமூவகைக்குந்தகசமாகிப்
பொருந்தியதோர்பாசமினிப்போற்றக்கேணீ. (௰)

மலமரியவினைமாயைமாயேயந்திரோத
மன்னியதோராணவந்தானொன்றாகிச்சத்தி
பலவிதமாய்ச்செம்பிலுறுகளிம்பேயென்னப்
பசுவெவையுமகலாதுவியாபித்தோங்கு
மூலவுத்தணமேழுவற்றுளதிகமாக
வுரைக்கின்மலம்பசுத்துவமஞ்ஞானமூர்ச்சை
நலமதிலாவவித்தைதமமாவிருதிமறைப்பு
நாடிலிவைபரியாயநாமமாமே. (௧௧)

வேறு.

சாற்றியகன்மந்தானுமிருவிதந்தன்மாதன்மந்
தோற்றுவித்தளித்துப்போக்குந்தொழிலினுக்கேதுவாகி
யாற்றுநீரொழுக்கம்போலவனாதியாய்மலத்தினாலு
மூற்றமாய்த்தோன்றியென்றுமுறைந்திடுமாயையுள்ளே, (௧௨)

மறப்பறியாமையாதிமயக்கமுஞ்செய்யுமாயை
சிறப்பின்மாயேயஞ்சென்மவேதுவாயதனிலன்றே
பிறப்புறுமவனியந்தங்கலைமுநற்பெண்டிர்மக்கள்
வெறுப்புறுசாதியாதிவிகற்பமாம்விளம்புங்காலே. (௧௩)

திரோதமாமலமென்றோதுஞ்சிவசத்திதன்னைத்திப
விரோதமாமலங்களெல்லாமேவியீதியற்றலாலே
நிரோதஞ்செய்தீசன்றன்னையணுவினுக்கிணையாவண்ணம்
குரோதஞ்செய்காமமாதிகூட்டிடுமுயிர்கட்கெல்லாம். (௧௪)

ஐவகைமலத்திறேடுமன்னியமாகிநீங்கா
மெய்யுறுமான்மரூபமுழுவதுமுணர்ந்தமேலோர்
துய்யநற்போகமுற்றுந்துய்த்தெலாமொடுங்குஙகால
மெய்யுறுஞானநந்தமேவிவீற்றிருப்பரன்றே. (௧௫)

ஆன்மரூபமுற்றும்
ஆகந்திருவிருத்தம் ௨௩௭.

—∘∘⊱⊰∘∘—

ஆன்மதரிசனம்.

தெரிசனமுரைப்பக்கேணீசெப்பியவான்மாவின்ற
னெரிகதிரொளியிற்காந்தத்திலங்கியவாறுபோலப்
பரிவொடுகுரவன்றேன்றப்பண்டுளஞானச்செய்தி
துரியமாமவத்தைதன்னிற்றேண்டிடிற்றனுந்தோன்றும். (௧)

தத்துவத்தொகையுஞ்சாற்றுமணுக்களுந்தனுட்டானே
யொத்தறிந்தெவையுமாகியுயிர்த்தன்மைநீங்கிநீங்கா
நித்தனுய்ப்பிறப்புமில்லாநிமலன்றூன்றூனேயென்று
புத்திசெய்திடுவன்பஞ்சவவத்தையைப்புகலக்கேணீ. (௨)

சாக்கிரமுதலாயைந்துஞ்சாருங்கீழ்நடுவுமேலு
மாக்கியதத்துவத்தையணுவினையமலன்றன்னை
நோக்குவமேலேயுள்ளவவத்தையினெய்யபோகந்
தேக்கியுமருண்டுநிற்பர்சேர்ந்துகீழ்நடுவவத்தை. (௩)

எழைந்தையந்தும்மூன்றேடிரண்டொன்றுஞ்சாக்கிராதி
வாழ்தலம்புருவங்கண்டமார்பகநாபிகோசஞ்
சூழுறுசாக்கிரத்திற்றுய்த்திடும்விடயமெல்லா
மாழியசொப்பனத்திலருந்துமாபோலத்தோன்றும். (௪)

மன்னியசோத்திராதிவாக்காதிவாயில்பத்தும்
பின்னமில்விடயம்பத்தும்பிறங்குமுட்கருவியைந்தும்
துன்னியவாயுபத்துஞ்சூழ்ந்திடுஞ்சாக்கிரத்தி
லுன்னியசொப்பனுதிக்குறுமுறையுணர்ந்துகொள்ளே. (௫)

தூலமேசூக்கம்பின்னையதிசூக்கஞ்சூக்கமேலு
மேலுமாஞ்சூக்கமென்றேபியம்புவர்சாக்கிராதி
சீலமார்பிரத்தியாகாரந்தாரணைதியானத்தாலு
மேலதாஞ்சமாதியாலும்விசயமாமீசனாலும். (௬)

வெளியொடட்கரணத்தாலுமணுவதன்விடயங்காண்ட
றெளிவுறுசாக்கிரந்தேர்சுவணமுட்கரணத்துள்ள
களியுறுவிருத்திகாண்டல்காயவிந்தியங்கணீங்கி
யொளியுறுமவசங்கோடலுரைத்திடிற்சுழுத்தியாமே. (௭)

துரியந்தேகேந்தியத்தின்றடக்சுறுத்துயிருணீங்கா
விரிவுறஞானமேவன்மேற்படுசிவோதயந்தா
னுரியதோர்துரியாதீதமுணருமேலவத்தையைந்தும்
பெருகிடும்விரிக்கிலின்னும்பேசுவங்கேட்டிமேலோய். (௮)

தத்துவமிருபத்தைந்திற்சங்கரன்றன்னைக்காண்ட
லுத்தமசாக்கிரந்தானுணர்தல்சொப்பனமேலேந்திற்
சுத்ததத்துவத்திற்பார்த்தல்சுழுத்தியாமுயிருணேக்க
வத்தகுதுரியமீதேயறிந்திடலதீதமாமே. (௯)

இருதயத்துள்ளுங்கண்டத்திடையிலுந்தாலுமேலு
பிருருடிநடுவுமேலும்பிரமரந்தரத்தும்பேணி
மருவிடுஞ்சாக்கிராதியவத்தையின்மாசுநீங்கிக்
குருவருளாலேதன்னைக்குறித்திடல்கூறக்கேணீ. (௰)

வேறு.

ஓங்கொளியவுன்மனையினதீதந்தன்னி
லுற்றிடுமொருயிர்தன்னைச்சரீரமின்றி
தீங்கறுமெய்ஞ்ஞானவிழியாலேபார்க்கிற்
சிறப்புறுமப்பொழுதுமிகுசாந்தமாகி
நீங்கரியவாசையறவெங்குமாகி
நின்மலமாய்ச்சேதனமாய்க்கருத்தாவாகிப்

பாங்குடையபதித்துவந்தான்பசுவுக்குண்டாய்ப்
பரமனைப்போலெங்குமாய்ப்பதியுந்தானே. (௧௧)
செப்பியவிச்சிவத்துவந்தானுயிர்கட்செல்லாஞ்
சேருணத்திலடங்கியிடுங்கனகம்போலக்
கப்பறவேயுளதன்மேறதுளிகைகீவக்
கனகவுருவாய்க்களிம்புகாணுவாபோல்
ஒப்பறசீர்ச்சிவன்குருவாய்ப்பரிசஞ்செய்ய
வுறுமலந்தீர்ந்தருளுவன்பசுவாகான்பின்
றிப்பியமாமரணிதிக்கடையத்தோன்றுஞ்
செந்தழல்நெய்யவையாகாத்திறனேபோல். (௧௨)
சித்துருவாஞ்சிவனுமியானெனவேகண்டு
தெருண்டவர்கள்பரமுத்திசேர்ந்தபின்னைத்
தத்துவங்கடமைமுறையேயொடுக்கினாதன்
றனையறியவுயிர்களினைப்பாற்றுங்காலத்
தொத்தாறுஞ்சச்சிதானந்தத்தோடேயொன்றா
யொருவாத்திருவோடுமுற்றுவாழ்வர்
முத்தனுயர்திருவருளாலான்மசுத்தி
மொழிகுவங்கேளருள்வழிபின்முயல்கின்றாயே.

ஆன்மதரிசன முற்றும்
ஆகந்திருவிருத்தம் ௨௫௰.

—○○—

ஆன்மசுத்தி.

அறியவோர்நாமமின்றியாலம்பமின்றிப்பற்றிச்
செறியவோர்தானமின்றிச்சிந்தனையிறந்துமேலாய்க்
குறியொடுகுணமுமில்லாவுருவொடுங்கூடியொன்றாய்
நெறிதருமருவினாலேநீத்திடுஞ்செயல்களெல்லாம். (௧)
பாசபந்தத்தினாலேசீவனாம்பாசம்போனா
லீசனேயுயிரேயாகுமியைந்திடுங்கன்மத்தாலே

ஆன்மசுத்தி

நாசமேநல்வினைகளெல்லாநாதனுமலத்தினாலே
தேசுதீர்பசுவாம்போனாற்சிவனுமாஞ்சீவன்றானே. (௨)

வினையினில்விளைந்தயாக்கைமீளவும்வினையையாக்குந்
தினையளவெனினும்யானாய்ச்செய்ததொன்றில்லையென்று
நினையுமவையிரண்டுநீங்குநின்மலனருளினாலே
யுனைமலமகலுபாயமுத்தமனுணைத்தோய்கேட்டே. (௩)

இரண்டெழுத்தியமனாகமியைந்திடுந்துன்பாலின்பாற்
றெருண்டமூவெழுத்தைநாளுந்தேர்ந்துநீபிரமமென்றே
முரண்டகுமிரண்டைநீக்கிமூன்றினையுணர்குவாயே
லரன்றனைப்போன்றெந்நாளுமழிந்திடாதமர்வைகண்டாய். (௪)

எனதெனுமுணர்வினாலேயேய்ந்திடுந்துன்பமெல்லாந்
தனதெனுமுணர்வைநீத்தோன்சாருவனின்பமுற்றுந்
தினமொருகோழிபூனைசேர்ந்தனன்றுயரம்வீட்டின்
முனமுறுமபிமானந்தான்மூடிகமீந்தாலுண்டோ. (௫)

பெத்தமுமுத்திதானும்பின்னமோவுண்ணிலென்று
மத்தநீயெனதென்றன்னுமறிவினாலடையும்பெத்தஞ்
சுத்தமேநினதொன்றின்றிச்சூழறிவாகுமுத்தி
சித்தமேபெத்தமுத்திசெய்திடுமுயிர்கட்கெல்லாம். (௬)

தருமத்தான்மேல்போங்கீழேசார்ந்திடும்பாவத்தாலே
குருவருண்ஞானவாளாற்குறைத்துயிரண்டுங்காய
மொருவிடவெங்குமாகியுற்றிடுஞ்சாந்திதன்னை
மருவுதலான்மசுத்திவல்லவர்முத்தராவார். (௭)

ஆன்மசுத்தி முற்றும்.

ஆகத்திருவிருத்தம் உடுள.

தசகாரியம்.

சிவரூபம்.

செப்புவங்கேடுகடீரறிவின்கேள்வசிவரூபமுயிர்கடொறுஞ்
செறிவதாகி;யொப்பருசீர்விந்துவினுமாயையுள்ளுமோங்கொளி
யதத்துவத்துநீங்காதொன்றி,மெய்ப்படுபேரறிவாகிவிமலமாகி
வியாபகமாயருவுருவமிரண்டுமின்றித்,தப்பறுசீரானந்தவுருவு
மாகித்தருப்பணத்தினிழல்போலச்சாருமெங்கும். (க)

வேறு.

சயம்புமாலானேயீசன்சதாசிவம்விந்துநாதம்
பயந்தருள்சத்திமேலாம்பரசிவமொடுங்குந்தானம்
வியந்திடுநிருத்தானந்தமெய்ம்மைகொள்குருவுரூபம்
முயர்ந்திடுவொனிற்சாபமுமுருகுநெய்க்கனலும்போலும். (உ)

வன்னியுமொளியும்போலமருவியவனுக்கடாமே
சென்னியுமுகமுமற்றுஞ்சிறந்தபல்லுறுப்புமாகி
மன்னியஞானியோகிமந்திரிகிரியையோனு
முன்னியுட்புறத்தும்பூசையுஞற்றிடவமர்ந்தவன்றே. (ங)

மாயைதானென்பர்சில்லோர்மருவியவிந்துவென்ப
ராயதோர்நாதமென்பரதனின்மந்திரமேயென்பர்
தூயதோர்சத்தியுள்ளேதோன்றியவுருவமென்பர்
நாயகனருளாற்கூறுமாகமநயந்திடாரே. (ச)

எஞ்சலில்யோகயோகிக்கிறைவராமிறைவற்கென்றும்
பஞ்சமந்திரங்களாலேபுகன்றிடுதனுவும்பார்க்கிற்
றஞ்சமாவரணமின்றிச்சார்ந்திடுஞ்சாத்துவியென்
றஞ்சலிமறைகளோடேயாகமமனைத்துங்கூறும். (ரு)

சிவனுருவெவைக்குமேலாய்ச்செப்புமந்திரங்களன்று
யவமுறுமலமுமின்றியணுமயமாகியென்று
முவமையார்தாரரூபமோங்குமாலம்பமின்றிப்
பவமுதலகன்றேயெங்கும்பதியுமெட்டயிலம்போல. (சா)

படிபுகழீசானுதிபஞ்சமந்திரங்களாலே
முடிமுகமிதயங்குய்யமூர்த்தமுமாக்காமுன்னில்
வடிவுறுமந்தராங்கமந்திரமிருதயாதி
யடிகளிம்மனுவும்பின்னவனுவெனவறிந்திடாரே. (௭)

உள்ளுறுகரணமாகவுறைவனவானுக்கன்றே
தெள்ளியவாரணீயுஞ்சென்னியுமுரோதைதானு
மொள்ளியவாகமத்தாலுணர்ந்திடும்பெரியோர்போற்றிக்
கள்ளியஞானத்தோர்க்குக்காணலாந்தகைமைத்தாமோ. (௮)

எங்கணும்பாதம்பாணியெங்கணும்விழிமுகங்க
ளெங்கணுஞ்சோத்திராதியேனையதானநண்ணி
யெங்கணுமாவரித்தேயிருந்திடுமிறைவன்றன்னை
யெங்கணுமாகுமுன்னுளிரண்டறவெண்ணிடாயே. (௯)

இப்படிச்சிவரூபத்தையிரண்டறவுயிரினுள்ளே
யொப்பறுகுரவன்கூறவொருமைகொண்மனத்தினாலே
தப்பறவுணர்ந்தமேலோர்தாமவனுவர்மீளா
ருப்புறுபவ்வநீரோடோடைநீருற்றதென்ன. (௰)

சிவரூபமுற்றும்.

ஆகத்திருவிருத்தம் ௨௱௭.

சிவதரிசனம்.

அரனெனுங்கதிரோன்சத்தியழகுறுவிளக்கத்தாலே
வரமுறுஞானநோக்கான்மலமுதலகன்றவான்மா
பரனெனச்சத்தியாதிபலவொடுமுயிருட்பார்த்தல்
திரமுறுதவத்தின்மிக்கோய்சிவதரிசனமீதாமே. (௧)

ஓங்கியவுருவமுண்டென்றுரைத்துமுன்னதனையின்னுந்
தீங்கறத்தரிசியென்றேசெப்பினைதேவதேவ
வாங்கரற்குருவமுண்டோவவித்தைமுன்னடையாதாகிற்
றூங்கிடுமுருவமென்னிற்சகளனுமணுக்கள்போல. (௨)

புருடனுக்காகயாரும்பொருவிலானுருவந்தன்னை
மருவினனதுவுநல்லமந்திரவடிவமாகுந்
தெருடருமனுவுமிக்கசிவசமவேதைநம்பொன்
மருடருவடிவோவெல்லாமாயினுமாசற்றாயே. (௩)

ஒத்துருசத்திதானேயுருவமாய்த்தோன்றுமென்னில்
வைத்திடும்பரிணாமந்தான்மருவுமானந்தமாகி
நித்தமாமத்துவாவினிகழ்ந்திடுமாறதின்றுஞ்
சித்தரேபோலவெல்லாவுநவமுஞ்செறிவனன்றே. (௪)

ஆதியுநடுவுமீறுமகன்றெலாமறிவனாகித்
தீதில்பூரணனாயுள்ளோன்சிவனெனவுளத்துநோக்கிற்
சோதிசெய்திடுவன்முன்னைத்துகளறவறிஞர்க்கீச
னோதியவமலனின்றேலுலகினுக்குதயமுண்டோ. (௫)

சேதனமல்லமூலஞ்சிற்றுயிர்க்கறிவொன்றில்லை
யோதியப்ரமாணுத்தானுள்ளதேலதுவுமாங்கே
தீதுறுஞ்சேதனத்தாற்சகமிறையருளையின்றிக்
கோதறவுதியாதாகுங்குலாலனில்கடங்கள்போல. (௬)

துணைவயித்தியனையின்றித்துன்புறும்பிணியன்போன்று
மணைவுறுமிரவியில்லாதழுங்கிடுமுலகம்போன்றும்
பிணையெனவெருண்டவொண்கட்பிறைநுதலிறைவியோடே
யிணையுறுசிவனையின்றியிடருறுமுயிர்களெல்லாம். (௭)

எவனரனிடத்தேயெல்லாமிருந்திடவெங்குமாகும்
பவனையப்பொருளனைத்தும்பதிந்திடுமாறுபார்க்கு
மவனுயிரிடத்தேயீசனமர்ந்திடுமவனுமென்றுஞ்
சிவனிடத்துறையுநீயுஞ்செறிந்தவையறிந்துபாரே. (௮)

நற்றவத்தலைவரெல்லாம்ஞானமேயாதியீசற்
குற்றிடுங்குணங்களாறுமுறைசெயவேண்டுமென்னச்
சிற்றுயிர்பாசநாசஞ்செறிந்ததத்துவஞ்சிருட்டி
முற்றுமுற்றுணர்தலாலேமுழுதுணருடையானென்பர். (௯)

ஓங்கியபொருள்கண்முற்றுமுடையனாயுலகுக்கெல்லாந்
தீங்கறுசார்வுமாகிச்செறிந்திடுஞ்சார்பொன்றின்றி
யாங்குறுபொருளனைத்துமடைந்தென்றுநிறைதலாலே
பாங்குறுதவத்தோயீசன்பரிதிதானாவனன்றே. (௰)

அனாதியாயியல்புமாகியனைத்துளவுயிர்கட்கன்றே
தனாதுசிற்சத்திதன்னாற்றானறிந்தியற்றலாலே
மனாதியினறிவுக்கெட்டாவரம்பிலாவறிவனாகு
மெனாதியையனாதிபோதனென்றியலனைத்துங்கூறும். (௧௧)

சாற்றுமூவுலகத்தோடேசராசரஞ்சகமனைத்துந்
தோற்றுவித்தளித்துப்போக்குந்தொழிறனக்குரிமையாலே
தேற்றமாமறிவான்மிக்கசெழுந்தவதேவதேவ
னாற்றல்கொள்சுதந்தரத்தோனாமெனவறைவர்மேலோர். (௧௨)

நித்தமாய்த்தோற்றமின்றிநிலைபெறவெவையுந்தானே
சுத்தனாயறிந்தெவர்க்குஞ்சுகத்தினையுதவித்தோய்ந்தும்
வைத்திடும்பொருள்களெல்லாமாய்ந்திடாதமர்தலாலே
யத்தனையலுத்தனென்றேயாகமமனைத்துங்கூறும். (௧௩)

தனாதியுநடுவுமீறுந்தவிர்ந்துமுன்னொருவராலு
முனாததற்சத்தியென்றுமுலப்பிலாவாதலாலே
யெனாதியையனந்தனென்றேயியம்புவரிந்தவாறு
மனாதியாமரனுக்காதியணுவுக்காவரணத்தாலே. (௧௪)

தெரிவுறுவிராகுகேதுசெங்கதிர்மதியினுள்ளே
மருவிடக்காணுமாபோன்மற்றவன்றன்னையுன்னு
ளொருவிடாதுணர்ந்துநோக்கியுடந்தையாயவன்போலன்றே
பிரிவுறுவறிவானந்தம்பெறுவைநீயுறுதியாமே. (௧௫)

சிவதரிசன முற்றும்

ஆகத் திருவிருத்தம் ௨௮௨,

ருஅ

தசகாரியம்.

சிவயோகம்.

காண்டகுசிவன்போலுன்னைக்கருதியேயவனோடொன்றாய்ப்
பூண்டுநின்றிடுதலன்றேபொருவறுசிவயோகந்தா
னீண்டிஃதறிவான்மிக்கவிருந்தவவுற்சாகாதி
மாண்டசாதனங்களாறும்வல்லையேயெல்லைவாய்க்கும். (க)

எங்கணுமடைந்தோன்றேவனேனையவுயிர்களெல்லாந்
தங்குவானெங்குமாயதத்துவரூபன்றானு
மங்கணனமலநித்தனனுமயனறிவான்மிக்க
செங்கண்மாலயனுங்காணச்செழுஞ்சுடரோனுநானே. (உ)

கலையின்றாய்ஞானமாகிக்கருதுநிச்சயமாய்வீயு
நிலையின்றாய்விகற்பமின்றிநிமலமாயேதுவோடே
மலைவறுவொப்பின்றாகிமருவியகுறியொன்றின்றா
யலைவறுசாந்தமாதியாகியபொருணானன்றே. (ந)

மந்திரவடிவமானவானவனனேயெல்லா
மந்திரங்கடந்தோன்யாண்டுதோன்றிடாவடிவமானேன்
முந்தியசராசரங்கண்முழுவதும்வியாபித்தோங்கு
முந்தியவுலகமெல்லாமுதித்திடுவிப்போன்றானும். (ச)

அவமுறுமனேககோடியாகியபுவனஞ்சூழுஞ்
சிவமுதலவனியந்தஞ்செறிந்ததத்துவங்களெல்லா
மவமுறவுறையுமென்னுமாக்குவனவற்றுள்யானு
முவமையில்சராசரங்கட்குள்ளினும்புறத்துமுற்றே. (ரு)

சீவனுஞ்சிவன்வேறாகுஞ்சிறந்தவான்மாவென்றேதும்
பாவனைமோகத்தாலேபயில்குவார்சிவத்துவத்தை
மேவிடார்சிவன்வேறாகும்வேறியானென்றிடாதே
யோவறவவனென்றுமொற்றுமைபுணர்ந்துநோக்கே. (சு)

தன்னையேசிவனென்றெண்ணித்தானவனாகிவேறற்
றுன்னவேசமரதத்தாலுதித்திடுமரனோடொன்றிப்

பின்னமில்குணங்களெல்லாந்தன்னுளும்பிறங்கலாலே
யன்னியனுயிர்ீ நாக்கென்னவங்கியன்பாலிற்பால்போல். (எ)

இன்னதோர்முறைமைபாலேயெய்திடுஞ்சிவத்துவந்தான்
மன்னியமலத்தினாலேமாழ்கியுள்ளடங்கியான்மா
தன்னையுமறியா தாகுந்தற்பரன்கருணையாலே
யுன்னுவித்திடவுண்ணுேக்கியுடந்தையாயுறையுமன்றே. (அ)

உற்றிடுஞ்சிவனுனென்றேயொற்றிடுஞ்சித்தாந்தத்தின்
மற்றையவதுநானென்றேமறைமுடிவதனிற்கூறுங்
கற்றவரிரண்டுமொன்றுய்க்கருதுவர்மலம்போங்காலஞ்
சிற்றுயிர்த்தன்மைநீங்கிச்சிவத்துவம்பெறுதலாலே. (கூ)

வேறு.

என்றியம்புஞ்சிவயோகத்தியல்பையெல்லா
மியல்புடையகுரவனடியிறைஞ்சிக்கேட்டு
நின்றவர்களிவ்வுலகிற்சீவன்முத்தர்
நிறைந்ததவரவர்பெருமைநிகழ்த்தலாமோ
கொன்றிடினுமர்தணர்களாதியோரைக்
கூறிடினும்பொய்களவுட்கொள்ளும்போதுஞ்
சென்றிடினும்விடயமெனுவேலைநாப்பண்
சிறந்தானையொருபொழுதுமறந்திடாரே. (ய)

சிவயோக முற்றும்.
ஆகந்திருவிருத்தம் உகூஉ.

சிவபோகம்.

செப்புவங்கேளருந்தவரிற்சிறந்தமேலோய்
சிவபோகமுனதுமனங்கொதருளுமாற்று
லொப்பரியசிவனிவனேடுடந்தையாகி
யொளிவிடுங்காண்மலபாசவிருள்களோடத்
தப்பறவேநின்மலமாம்பரமானந்தந்
தான்பிரகாசிக்குமங்கேசமமதாக

வப்பொழுதேயிவனவனோடொன்றியெங்கு
மமர்ந்திடுவனறிவுதொழிலிச்சையோடும். (க)

வேறு.

தானதனென்றெந்நாளுஞ்சாற்றுதலதிகமோக
மீதலவதுநானென்றேயியம்புதல்பிரமையாகு
மோதிடனேயெல்லாமெனவுணர்ந்திடுதலுள்ளே
தீதுறுமயக்கமூன்றுஞ்செறிந்திடாதறிந்திடாயே. (உ)

வேறு.

நித்தியமாமானந்தவுருவத்துள்ளேநீங்காதேதாங்கிடுகநிமலமாகி
சத்தியமாய்ச்சூனியமாஞ்சிவாநுபூதி தான்பிரகாசிக்குமுன்னுட்
டருமநீதி, யுத்தமனேயூமனுணர்கனுப்போலாகியுணராதேயுணர்
தல்சிவபோகமாகு, முத்தநிலைதானுமிதுமோனமானமுடிவிலா
நிரதிசயமொழியுங்காலே. (ந)

வேறு.

ஞானவாசாரந்தன்னைநவிலுமாகேட்டிநல்ல
தானமார்கன்மாசாரஞ்சாத்திராசாரமென்னே
யீனமில்சமயாசாரமென்செயவுலகாசார
மானவாசாரந்தானேயறுதலாசாரமாமே. (ச)

வேறு.

செய்திடுநற்சிவபூசைவணக்கமின்றிச்சிறந்தசெபந்தியானமுதல்
செறியானுகி,மையலறஞேயத்தேயடங்கிப்பின்னைமதியாதே
யொன்றினையுமதிக்கவீது,வெய்யபசுக்கறக்குமளவாதலம்பு
வீழுமளவாதல்விழியிமைப்போதாகி,யெய்திடுவரேலொருகாலப்
பரபதத்திலொன்ருயிறந்துபிறந்திருநிலத்துமியைந்திடாரே. (ரு)

வேறு.

